மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

மலர் 8 • இதழ் 5 • நவம்பர் 2023 • விலை ரூ.18/-

# வெண்மை


தமிழ் மாத இதழ் VENMAI

## எண்ணங்கள்

இனிய
தீபாவளி
நல்வாழ்த்துகள்



# வெற்றியாளர் சிறப்பிதழ்


RAMRAJ ©
COTTON
WHITE SHIRTS
WHERE
PERFECTION
MEETS
DIGNITY
Available at Ramraj Cotton Showrooms and All Leading Textile Shops | shop online @ www.ramrajcotton.in

மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

வாழ்வில் பெரும் வெற்றியை வசப்படுத்த ஆசைப்பட்டு
அதையே லட்சியமாகக் கருதி கடுமையாக உழைத்து
வெற்றியாளராக மாறுவதற்கு வழிகளைச் சொல்லும்



# வெற்றியாளர்
## சிறப்பிதழ்

என்ற இந்தப்
பயனுள்ள நூலை
வழங்குவதில்
பெருமிதம்
கொள்கிறோம்.

# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

எதிலும் வெற்றி பெற அதிகம் உழைக்க வேண்டும். பெற்ற வெற்றியைத் தக்க வைத்துக்கொள்ள அதிகம் போராட வேண்டும். முதல் வெற்றியைப் பெறுகிற உத்வேகம் அனைவரிடமும் இருக்கும். ‘இந்தப் படிப்பு படிக்க வேண்டும்’, ‘இந்த வேலையில் சேர வேண்டும்’, ‘இப்படியான வாழ்க்கை அமைய வேண்டும்’ என ஒவ்வொருவருக்கும் ஒரு கனவு இருக்கும். அந்தக் கனவை அடைவதற்கு முழுமூச்சாகப் பாடுபடுவார்கள். அந்த இலக்கை அடைந்துவிட்ட பிறகு ஜெயித்துவிட்டதாக அப்படியே விட்டுவிடுவார்கள். கொஞ்ச நாளில் மீண்டும் ஆரம்பித்த இடத்திற்கே வந்து நிற்பார்கள்.

இலக்கை அடைந்துவிட்டால் வெற்றி நம் கூடவே நிரந்தரமாகத் தங்கிவிடும் என்று நம்புகிற பலரைப் பார்த்திருக்கிறேன். ஆட்டமே அதற்குப் பிறகுதான் ஆரம்பிக்கிறது என்பதைக் கவனிக்கத் தவறிவிடுவார்கள். ‘போலீஸ் வேலையில் சேர வேண்டும்’ என்பதற்காகத் தினமும் பயிற்சிகள் செய்து உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பவர்களுக்கு, வேலையில் சேர்ந்ததும் கட்டுப்பாடு காணாமல் போய்விடும். நிறைய படித்துப் பேராசிரியர் ஆனவர்கள், வேலை கிடைத்த பிறகு படிப்பதைக் கைவிடுவார்கள். தொழிலில் இரவு பகலாக உழைத்து ஒரு உயரத்தை அடைந்தவர்கள், அதன்பிறகு சொகுசு வாழ்விற்குத் திரும்பிவிடுவார்கள். எல்லாத் துறையினருக்கும் இது பொருந்தும்.

ஒரு விவசாயி விதைத்த பயிரை அறுவடை செய்து முடித்த பிறகு, மீண்டும் அடுத்த விளைச்சலுக்கு நிலத்தைத் தயார்படுத்துவார். அதுபோல ஒவ்வொரு வெற்றிக்குப் பிறகும் அதைத் தக்க வைத்துக்கொள்ள தொடர்ந்து உழைக்க வேண்டும். சோர்ந்துபோகாமல், சொகுசு வாழ்விற்குப் பழகாமல், அடுத்த இலக்கு இதுதான் என முடிவு செய்து, அதற்காகத் திட்டமிட்டுத் தொடர்ந்து உழைக்க வேண்டும்.




வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்கிற எண்ணம் நம்மில் யாருக்கும் வரலாம். அது வெறும் ஆசையாக இருக்கப் போகிறதா, உயர்ந்த லட்சியமாக மாறப் போகிறதா என்பதை நாமே முடிவு செய்கிறோம். உழைக்கத் தயாராக இருப்பவர்களுக்கு, அது லட்சியமாகிறது. சோம்பலின் மடியில் கிடப்பவர்களுக்கு அது நிறைவேறாத ஆசையாகிவிடுகிறது.

எண்ணிய இலக்கை அடைந்தவர் வெற்றியாளர் இல்லை. அந்த வெற்றியைத் தக்கவைத்துக் கொள்பவரே வெற்றியை ஆளக்கூடியவர். உலகின் தலைசிறந்த வெற்றியாளராக, அமெரிக்காவின் பெரும் பணக்காரர்களில் ஒருவரான வாரன் பஃபெட் அவர்களைக் குறிப்பிட முடியும். மிகச்சாதாரண பின்னணியிலிருந்து அவர் அடைந்த வரலாற்று வெற்றியைவிட, அதைத் தக்கவைக்க என்ன செய்ய வேண்டும் என்பதை அனைவருக்கும் போதித்தார்.

‘செலவுகள் போக மிச்சமிருப்பதைச் சேமிக்காதீர்கள், சேமித்த பின் மிச்சமிருப்பதைச் செலவழியுங்கள்’ என்கிற அவரின் ஆலோசனை பலரை வெற்றியாளர்களாக மாற்றியிருக்கிறது. ‘உங்களுக்குத் தேவையில்லாத பொருட்களை வாங்கினால், விரைவில் உங்களுக்குத் தேவையான பொருட்களை விற்க வேண்டியிருக்கும்’ என்கிற அவரின் அறிவுரை, பலரைத் தோல்வியிலிருந்து காப்பாற்றி இருக்கிறது.

பங்குச்சந்தை தரகராக இருந்த வாரன் பஃபெட்டின் தந்தை, அமெரிக்காவில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட சூழலில், இருந்த பணம் முழுவதையும் பங்குச்சந்தையில் இழந்தார். குடும்பம் வறுமையின் வலையில் வீழ்ந்தபோது வாரனுக்கு ஒரு வயது. தன் தந்தை தனக்கு ஒருவேளை உணவை வழங்கக்கூடச் சிரமப்படுகிறார் என்பதை மிக இளம் வயதில் உணர்ந்தார். ‘35 வயதுக்குள் மிகப்பெரிய



செல்வந்தராக மாறுவேன்' என்கிற எண்ணத்தைத் தனக்குள் விதைத்து உழைக்கத் தொடங்கினார். தன்னை முழுமையாக நம்பினார்.

10 வயதாக இருந்தபோது நூலகத்தில் 'ஆயிரம் டாலர் சம்பாதிக்க ஆயிரம் வழிகள்' என்ற புத்தகத்தைப் படித்தார். அதில் இருந்த ஒரு குறிப்பு அவரின் கவனத்தை ஈர்த்தது. 'ஒரு பொருளை வாங்கிக் குறிப்பிட்ட லாபம் வைத்து விற்பனை செய்கிறீர்கள் என்றால், அந்த லாபப் பணத்தில் அதேபோல இன்னொரு பொருளைக் கூடுதலாக வாங்கி விற்பனை செய்யுங்கள். உங்கள் லாபம் மீண்டும் மீண்டும் முதலீடாக மாற வேண்டும். பிறகு நீங்களே அந்தப் பொருளை உற்பத்தி செய்து விற்பனை செய்வீர்கள். இந்த முறையில் பணம் சம்பாதிக்க நீண்ட காலம் ஆகும் என்றாலும், இது நீண்ட காலத்திற்கு வளர்ச்சியைத் தக்கவைக்கும். நிறைய லாபத்தை அளிக்கும்' எனப் புத்தகத்தில் இருந்தது.

இந்த ஆலோசனை அவரை ஈர்த்தது. இந்த ஃபார்முலாவை தனது அடிப்படை மந்திரமாக மாற்றி, 11 வயதிலிருந்து உழைக்கத் தொடங்கினார். கைமேல் பலன் கிடைக்கத் தொடங்கியது. புத்தகங்கள் விற்றார், அதிகாலை 4 மணிக்கே எழுந்து செய்தித்தாள் விற்க ஆரம்பித்தார். 11 வயதில், அவர் செய்தித்தாள் விற்பனை மற்றும் சிறு வணிகத்தில் சம்பாதித்த பணத்தில் பங்குச்சந்தையில் 38 டாலருக்குத் தனது முதல் பங்கை வாங்கினார்.

பங்குச்சந்தையின் ஏற்ற இறக்க நுட்பங்களைக் கண்டறிந்தார். தான் முதலீடு செய்கிற நிறுவனங்களை மிகக் கவனமாகத் தேர்ந்தெடுத்தார். அவரிடம் முதலீடு கேட்டு வருகிற நிறுவனங்கள், வாடிக்கையாளர்களுக்கு உண்மையாக இருக்கின்றனவா என்பதையே முதல் தகுதியாகப் பார்ப்பார். வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெற்ற நிறுவனமே முதலீடு செய்வதற்கு சிறந்த நிறுவனம் என்பது அவரின் உறுதியான நம்பிக்கை.

30 வயதில் செல்வந்தர் ஆகவேண்டும் என்கிற வாரன் அவர்களின் லட்சியம், அவரின் உழைப்பாலும் திறமையாலும் நிறைவேறியது. தன் இலக்கை அடைந்த பிறகு அவர் ஓட்டம் இன்னும் தீவிரமாக இருந்தது. பல ஆயிரம் கோடி ரூபாய் சம்பாதித்த பிறகும் அவர் தன் வாழ்க்கைமுறையை மாற்றவே இல்லை. உலகின் மிகப் பெரிய பணக்காரர்கள் வரிசையில் இருக்கிறார் என்பது மட்டும் வாரன் பஃபெட்டின் வெற்றி இல்லை. அவரைப்போல பல லட்சக்கணக்கான தொழில்முனைவோரை உருவாக்கி வழிகாட்டினார். மிகவும் எளிமையான வாழ்வைத் தொடர்ந்தபடி, தனது செல்வத்தின் பெரும் பகுதியை உலகின் பல்வேறு நற்செயல்களுக்கு நன்கொடையாக அளிக்கிறார்.

எந்தச் சூழலிலும் நிதானம் தவறாமல் இருப்பதும், லாபத்தை மீண்டும் முதலீடு செய்வதும் சிறிய வயது தொடங்கி இப்போது வரை தொடர்கிறது. வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ளும் வழிமுறையைக் கண்டுபிடித்து, மிகச்சிறந்த வெற்றியாளராக 93 வயதிலும் முன்னுதாரணமாக வாழ்ந்து வருகிறார். பணத்தில் முதலீடு செய்தவர்களைவிட, நேரத்தில் முதலீடு செய்பவர்களே வெற்றி பெறுகிறார்கள் என்பதற்கு இவருடைய வாழ்வே உதாரணம். 'நம்பிக்கை என்பது நாம் சுவாசிக்கும் காற்றைப் போன்றது. அது இருக்கும்போது, உண்மையில் யாரும் கவனிக்க மாட்டார்கள். அது இல்லாதபோது, எல்லோரும் கவனிக்கிறார்கள்' என்பது அவர் சொன்ன பொன்மொழி. வெற்றியை நிரந்தரமாக்க விரும்புகிற வெற்றியாளர்களுக்கு மிகச்சிறந்த ஆலோசனை இது.

இந்தத் தீபாவளித் திருநாளில் நம்பிக்கையை மனதில் ஏந்துவோம். எங்களின் மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்கள், உறுதுணையாக இருக்கும் நேசத்துக்குரிய நெசவாளர்கள், பெருமைக்குரிய விற்பனையாளர்கள், எங்களுடன் இணைந்து பணியாற்றும் அன்பான அலுவலர்கள், பாசத்துக்குரிய பணியாளர்கள், 'வெண்மை' வாசகர்கள் ஆகிய அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள். நம் உள்ளங்களில் நம்பிக்கையின் தீபம் ஒளிரட்டும். இல்லங்களில் மகிழ்ச்சி பெருகட்டும்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

**நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்**

# காத்திருந்தால் கிடைக்கும் வெற்றி!

குழந்தையை ஓர் அறைக்குள் அழைத்துச் செல்வார் ஆராய்ச்சியாளர் ஒருவர். அங்கு ஒரு சொகுசான நாற்காலியில் உட்கார வைப்பார். நாற்காலிக்கு அருகே இருக்கும் டேபிளில் ருசியான சாக்லேட் ஒன்று இருக்கும். அந்த சாக்லேட்டைக் காட்டி, ''இது உனக்குத்தான்'' என்பார். குழந்தை ஆசையாக அந்த சாக்லேட்டை எடுக்கப் போகும்.

அப்போது குழந்தையைத் தடுத்து ஒரு விஷயத்தைச் சொல்வார் ஆராய்ச்சியாளர். "நான் இப்போது வெளியே போகிறேன். போய்விட்டுத் திரும்பி வரும் வரை நீ இந்த சாக்லேட்டைச் சாப்பிடாமல் அப்படியே வைத்திருந்தால், நான் வரும்போது இன்னொரு சாக்லேட் எடுத்துவந்து தருவேன். ஆனால், நான் வருவதற்கு முன்னால் நீ இதைச் சாப்பிட்டுவிட்டால், உனக்கு இன்னொரு சாக்லேட் கிடைக்காது" என்று சொல்லிவிட்டு வெளியில் போவார்.

அந்தக் குழந்தைக்கு இருப்பது இரண்டு வாய்ப்புகள். இப்போதே சாப்பிட்டால் ஒரே ஒரு சாக்லேட் மட்டும்தான்! ஆராய்ச்சியாளர் திரும்பி வரும்வரை காத்திருந்தால், இரண்டு சாக்லேட்கள் சாப்பிடலாம். ஆனால், அவர் எப்போது திரும்பி வருவார் என்று சொல்லவில்லையே! சில குழந்தைகள் அந்த ஆராய்ச்சியாளர் அறையை விட்டு வெளியேறியதுமே சாக்லேட்டை ஆசையாக எடுத்துப் பிரித்து சாப்பிட்டன. சில குழந்தைகள் கொஞ்ச நேரம் நாற்காலியில் அமைதியாக உட்கார்ந்து சாக்லேட்டையும் கதவையும் மாறி மாறிப் பார்த்தன. சில நிமிடங்களில் அவர் திரும்பி வராததால், சாக்லேட்டைச் சாப்பிட்டுவிட்டன. சில குழந்தைகள் நாற்காலியிலிருந்து எழுந்து நடந்தன. ஆசையைக் கட்டுப்படுத்திக்கொண்டு சாக்லேட் பக்கம் திரும்பாமல் அமைதியாக இருக்கப் பார்த்தன. ஆனால், முடியாமல் ஓடிப் போய் சாக்லேட்டைச் சாப்பிட்டன. மிகச்சில குழந்தைகள் மட்டுமே, 15 நிமிடங்கள் கழித்து அந்த ஆராய்ச்சியாளர் திரும்பி வந்தபோது சாக்லேட்டைச் சாப்பிடாமல் இருந்து, இரட்டை சாக்லேட்களைப் பரிசாகப் பெற்றன.

அமெரிக்காவின் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தில் 1972-ம் ஆண்டு செய்யப்பட்ட இந்தப் பரிசோதனை The Marshmallow



Experiment என்ற பெயரில் புகழ்பெற்ற ஓர் ஆராய்ச்சி. வெறுமனே இந்த சாக்லேட் பரிசோதனையால் மட்டுமே இது புகழ்பெறவில்லை. இந்த ஆராய்ச்சியில் பங்கேற்ற குழந்தைகளைத் தொடர்ச்சியாக 40 ஆண்டுகள் கண்காணித்தார்கள் ஆராய்ச்சியாளர்கள். அதில் கிடைத்த தகவல்கள் ஆச்சர்யம் தருபவை.

ஆராய்ச்சியாளர் திரும்பி வரும்வரை காத்திருந்து எந்தெந்தக் குழந்தைகள் இரண்டாவது சாக்லேட்டைப் பெற்றார்களோ, அவர்கள் தேர்வுகளில் நல்ல மதிப்பெண்களை எடுத்தார்கள். வளர ஆரம்பித்து டீன் ஏஜ் பருவத்தை அடைந்தபோதும் அவர்களில் யாரும் எந்தப் போதைக்கும் அடிமையாகவில்லை. உடல்பருமன் போன்ற நோய்கள் அவர்களுக்கு வரவில்லை. மன அழுத்தம் ஏற்படுத்தும் நெருக்கடியான சூழல்களை அவர்கள் வெற்றிகரமாகச் சமாளித்தனர். சமூகத்தில் மற்றவர்களுடன் நன்றாகப் பழகினர். வாழ்வில் எல்லாச் செயல்களிலும் அவர்கள் சிறந்து விளங்கினர்.

ஒரு செயலைச் செய்தால் கூடுதல் பலன் கிடைக்கும், அதற்காகக் காத்திருக்க வேண்டும், உடனடியாகக் கிடைக்கும் சிறிய வெகுமதிகளுக்கு ஆசைப்படக்கூடாது என்ற அடிப்படை உண்மையைத் தெரிந்துகொண்ட அவர்கள் வாழ்வில் வெற்றியாளர்கள் ஆனார்கள்.

நல்ல பழக்கங்களே ஒருவரை வெற்றியாளர் ஆக்குகின்றன. வெற்றியையும் மகிழ்ச்சியையும் அடைவதற்குக் குறுக்கு வழிகள் என்று எதுவும் இல்லை. பொறுமையே ஒரே வழி. வெற்றியை அடைவதற்கான மனநிலை கொண்டிருப்பவர்கள்தான் சக்திவாய்ந்த பழக்கங்களைத் தங்களுக்குள் உருவாக்கிக்கொள்ள முடியும். வாழ்வின் மிக முக்கியமான விஷயமாக அந்த வெற்றியைக் கருதி, அதை நோக்கி ஓட முடியும். வெற்றியாளர்களிடம் அப்படி இருக்கும் சில நல்ல பண்புகள்:

- வெற்றிகரமான மனிதர்கள் தங்களின் வெற்றியைக் கற்பனை செய்து பார்ப்பார்கள். தங்கள் ஆசையை இலக்காக மாற்றி, அதை அடைவதற்கு ஒரு காலக்கெடுவையும் வரையறுத்து உழைப்பார்கள். அந்த வெற்றியை அடையும்போது தாங்கள் பெற இருக்கும் பலன்களையும் மகிழ்ச்சியையும் கற்பனை செய்து பார்ப்பார்கள். அந்தக் கற்பனையே அவர்களைக் கூடுதல் தாகத்துடன் உழைக்க வைக்கும்.
- வெற்றிகரமான மனிதர்கள், தாங்கள் பேசும் வார்த்தைகளில் கவனமாக இருப்பார்கள். எதிர்மறையான சொற்கள் அவர்கள் உதடுகளிலிருந்து வெளிப்படாது. தாங்கள் பேசும் வார்த்தைகளை வைத்தே தங்களை இந்த உலகம் மதிப்பிடும் என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். அதனால் இனிமையான, நேர்மறையான விஷயங்களையே பேசுவார்கள்.
- வெற்றிகரமான மனிதர்கள் எப்போதும் நேரத்தை வீணடிக்க மாட்டார்கள். அவர்கள் கைவசம் செய்வதற்கு ஏதாவது வேலைகள் இருந்துகொண்டே இருக்கும். ஒவ்வொரு நாளிலும் எதைச் செய்ய வேண்டும் என்பதைத் தெளிவாகத் திட்டமிட்டு வைத்திருப்பார்கள்.
- வெற்றியாளர்கள் எல்லோருமே தங்கள் இலக்கைத் தெளிவாக வைத்திருப்பார்கள். அதைச் சின்னச்சின்ன பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு கட்டத்திலும் அடைய வேண்டிய இடத்தைத் திட்டமிட்டு, அதை அடைவதற்கான வழிகளையும் உருவாக்குவார்கள்.
- இறுதியாக இலக்கை அடைந்த பிறகு கொண்டாட வேண்டும் என்று அவர்கள் காத்திருப்பதில்லை. தங்கள் வாழ்க்கைப் பாதையில் கிடைக்கும் சின்னச்சின்ன வெற்றிகளையும் கொண்டாடுவார்கள். அந்தக் கொண்டாட்டமே அவர்களை இன்னும் வேகமாக உழைக்க வைக்கும் என்பதை அறிந்திருப்பார்கள்.
- அடுத்தவர்களைப் பற்றி அறிவதற்கு முன்பாக அவர்கள் தங்களைப் பற்றி அறிந்திருப்பார்கள். தங்களின் பலம் எது, பலவீனம் எது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கும். பலவீனங்களைச் சரிசெய்துகொள்ளவும், பலத்தை முழுமையாகப் பயன்படுத்தவும் முயற்சிகள் செய்வார்கள்.
- எந்தச் சலனமும் இல்லாமல், தங்கள் பாதையில் தடுமாற்றம் அடையாமல், மிகச் சரியாக இலக்கை நோக்கிச் செல்வார்கள். அதனால், எந்த வாய்ப்பும் அவர்களின் கண்களிலிருந்து தப்பாது.
- இந்தச் செயலை ஏன் செய்கிறோம், இதன் விளைவுகள் என்ன, இது நமக்கு என்ன தரும் என்பதைத் தெளிவாக உணர்ந்தே எதையும் செய்வார்கள். ஒவ்வொரு நாளிலும் இது அவர்களுக்கு நினைவிருக்கும்.
- தங்கள் செயலில் எதிர்படும் எப்படிப்பட்ட சவாலையும், தாங்கள் சந்திக்கும் எவ்வளவு மோசமான நெருக்கடியையும், வளர்ச்சிக்கான ஒரு வாய்ப்பாகவே அவர்கள் பார்ப்பார்கள். ஒவ்வொரு பிரச்னையிலும் தங்களின் மிகச்சிறந்த உழைப்பை வெளிப்படுத்தி ஜெயிப்பார்கள்.
- தங்கள் திறமைகள் குறித்து தற்புகழ்ச்சியாக அவர்கள் எதையும் சொல்லமாட்டார்கள். தங்களின் சாதனைகள் குறித்து தற்பெருமை பேச மாட்டார்கள். தன்னம்பிக்கையை வெளிப்படுத்தும் அதே நேரத்தில், பணிவாகவும் இருப்பார்கள். எப்படிப்பட்ட சூழலிலும் எளிமையைத் தொலைக்க மாட்டார்கள். ●



## துாக்கத்தைத் துறக்க வேண்டுமா?

உறக்கத்தைத் துறந்து உழைத்தால்தான் வெற்றி கிடைக்கும். பலரும் சொல்லும் அறிவுரை இது. தூக்கத்தைக் குறைத்து, பொழுதுபோக்குகளையும் தியாகம் செய்து மட்டும்தான் வெற்றி பெற முடியுமா? ‘‘அப்படி எல்லாவற்றையும் இழந்தால் சோர்ந்து போய்விடுவோம். சுறுசுறுப்பாக உழைப்பதற்கு சக்தி கிடைக்காது. அடிக்கடி கூர் தீட்டாத கோடரியால் மரம் வெட்டுவது போலப் பயனற்ற உழைப்பாக அது ஆகிவிடும்’’ என்கிறார்கள் சிலர். அமேசான் தலைவர் ஜெஃப் பெஜோஸ் போன்றவர்கள் ஒவ்வொரு இரவிலும் குறைந்தது 8 அல்லது 9 மணி நேரம் தூங்குகின்றனர். இரவில் நன்கு ஓய்வெடுத்தால்தான் பகலில் மிக அதிக உற்சாகத்துடன் வேலை பார்க்க முடிகிறது என்கிறார்கள் இவர்கள்.

தாமஸ் ஆல்வா எடிசன், நிகோலா டெஸ்லா, ஜாக் டோர்ஸி போன்ற சிலர் ஒரு நாளில் நான்கு முதல் ஆறு மணி நேரம் மட்டுமே தூங்குவார்கள். “குறைந்த நேரம் தூங்குவதால், உழைப்பதற்கு நீண்ட நேரம் கிடைக்கிறது” என்பார்கள் இவர்கள்.

யார் செய்வது சரி என்று விவாதிக்கத் தேவையில்லை. ஒவ்வொருவரின் இயல்பும் ஒவ்வொரு மாதிரி இருக்கும். சிலர் 6 மணி நேரம் தூங்கினாலே, நாள் முழுக்க சுறுசுறுப்பாக இருப்பார்கள். சிலருக்கு 8 மணி நேரத் தூக்கம் தேவைப்படலாம். ஒவ்வொருவரும் அவர்களின் இயல்பை உணர்ந்து அளவாக ஓய்வெடுத்தால், நிச்சயம் ஜெயிக்கலாம்.

## தோற்றவர்களையும் பாருங்கள்!

“வெறுமனே வெற்றியாளர்களை மட்டுமே பார்த்து, அவர்களின் பாதையைப் பின்பற்றாதீர்கள். தோற்றவர்களின் கதையையும் கேளுங்கள்’’ என்று சொல்வார், சீனாவின் புகழ்பெற்ற தொழிலதிபர் ஜாக் மா. ஏன் அப்படிப் பார்க்க வேண்டும். “வெற்றியாளர்கள் எதனால் ஜெயித்தார்கள் என்று அவர்களின் வாழ்க்கையிலிருந்து பாடம் கற்பது போலவே, சிலர் தங்கள் முயற்சியில் ஏன் தோற்றார்கள் என்பதிலிருந்தும் கற்கலாம். அவர்கள் என்ன தவறு செய்ததால் தோற்றார்கள் என்பதை அறிந்து, அந்த தவறைச் செய்யாமல் தவிர்க்கலாம். பிரச்னைகள் மற்றும் பின்னடைவுகளின்போது என்ன செய்ய வேண்டும் என்பதற்கான பாடமும், தோற்றவர்களின் வரலாற்றிலிருந்தே கிடைக்கும்” என்கிறார் ஜாக் மா.







## இழப்பதும் நன்மைக்கே!

பனிக்காடு ஒன்றில் இலையுதிர் காலத்தின் ஆரம்பம். வெயிலின் கடுமை தாங்காமல் தன் கிளைகளில் இருந்த இலைகள் அனைத்தையும் இழந்தது அத்தி மரம் ஒன்று. அதன் அருகில் இருந்த ஆலிவ் மரம் இப்படி இலைகளை

## வெற்றியின் 5 அடையாளங்கள்!

- வேலை, தொழில், வியாபாரம் என்று நீங்கள் எதைச் செய்தாலும், உங்களின் முதன்மை இலக்கு பணத்தின் பின்னால் ஓடுவதாக இருக்கக்கூடாது. உங்கள் செயல் மூலம் மதிப்பான சாம்ராஜ்ஜியத்தை ஏற்படுத்துங்கள். பணம் தேடி வரும்.
- கடின உழைப்பே வெற்றிக்கு அடிப்படை. வாய்ப்புகள் வரும்போது அவற்றைப் பயன்படுத்த நீங்கள் தயாராக இருக்கும் சில சந்தர்ப்பங்களில் மட்டுமே அதிர்ஷ்டம் உதவும். மற்றபடி உழைக்கத் தயங்காதீர்கள்.
- நண்பர்கள், உறவினர்கள், தொழில்முறை அறிமுகங்கள் என்று எல்லோரிடமும் நல்ல பழக்கம் வைத்துக்கொள்ளுங்கள். இந்தத் தொடர்புகளே உங்களை உயர்த்தும்.
- உங்களால் செய்ய முடியாத ஒரு விஷயத்தை வாக்குறுதியாகத் தராதீர்கள். செய்வதாகச் சொன்ன ஒரு விஷயத்தை மதிப்பு குறைவாகவும் செய்துவிடாதீர்கள். யாருக்கும் ஏமாற்றம் தருவதாக உங்கள் செயல்கள் இருக்கக்கூடாது.
- சராசரியாக இருக்கும் ஒருவர், சராசரியான மனிதர்களையே ஈர்க்க முடியும். திறமையும் சிறப்பும் கொண்டவர்களே, சிறந்ததைத் தேடும் மனிதர்களின் கவனம் பெறுவார்கள். எப்போதும் சிறப்பாகச் செய்யுங்கள்.

## வெற்றிக்கான மூன்று அடிப்படைகள்!



● **எப்போதும் மகிழ்ச்சியாக உணர:** நேர்மறையாகப் பேசும் மனிதர்களுடன் அதிக நேரம் செலவிடுங்கள். தினம் தினம் உங்களுக்குக் கிடைக்கும் எல்லா நல்ல விஷயங்களுக்காகவும் நன்றி சொல்லிப் பழகுங்கள். சின்னச்சின்ன நகைச்சுவைகளுக்கும் விழுந்து விழுந்து சிரிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அந்த மகிழ்ச்சியால் சுரக்கும் ஹார்மோன்கள் உங்களை உற்சாகமாக்கும். உங்களின் உடல்நலத்துக்கான பயிற்சிகள் மற்றும் மனவளத்துக்கான படிப்புகள் என்று தினமும் ஒரு மணி நேரமாவது செலவிடுங்கள்.

● **எப்போதும் மன அழுத்தம் தவிர்க்க:** வாக்குவாதங்கள், உரையாடல்கள் என மன அழுத்தம் ஏற்படுத்தும் சூழல்களிலிருந்து சீக்கிரம் வெளியேறுங்கள். கோபம், வருத்தம் என்று உணர்வுகள் கொந்தளிக்கும் நேரங்களில் அதிகம் பேசாதீர்கள். இயற்கையான சூழலில் இருப்பது, இசை கேட்பது போன்றவை மனத்தை இதமாக்கும். மூச்சுப் பயிற்சி செய்வதால், மன அழுத்தம் குறைக்கலாம்.

● **எப்போதும் நம்பிக்கையுடன் இருக்க:** உங்களைப் பற்றி நீங்கள் பெருமையாகக் கருதும் மூன்று விஷயங்களை நினைவுபடுத்திப் பாருங்கள். நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் உங்களை தன்னம்பிக்கையாளராக வெளிப்படுத்தும். உங்களைக் காயப்படுத்தும் சூழல்களிலும் நிலைகுலையாமல் உறுதியாகப் பேசுங்கள்.

இழக்காமல் பசுமையாக இருந்தது. அது அத்தி மரத்தைப் பார்த்துக் கிண்டல் செய்தது. “இப்படி ஒவ்வோர் ஆண்டும் இலைகளை இழந்து மொட்டை மரமாக நிற்பதே உன் துரதிர்ஷ்டம் ஆகிவிட்டதே! செத்துப் போன மரம் மாதிரி நிற்கிறாய். உன்னைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது. என்னைப் பார், ஆண்டு முழுவதும் பசுமையாக இருக்கிறேன்” என்று அத்தி மரத்தைக் கேலி செய்தது ஆலிவ் மரம்.

“இப்படி நான் இலைகளை இழப்பதற்கு ஏதாவது காரணம் இருக்கக்கூடும். இதில் எதுவுமே என் கையில் இல்லை. எனவே, நான் இதை நினைத்துக் கவலைப்படவில்லை” என்று பதில் சொன்னது அத்தி மரம்.

சில நாட்களில் பனிக்காலம் வந்தது. அந்த ஆண்டு பனிப்பொழிவு மிக அதிகமாக இருந்தது. ஆலிவ் மரத்தின் அத்தனை இலைகளிலும் பனிக்கட்டி சேர்ந்துகொள்ள, எடை தாங்காமல் முறிந்து விழுந்தது அந்த மரம். இலைகளே இல்லாத அத்தி மரத்துக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. ‘சில நேரங்களில் நம் கட்டுப்பாட்டில் இல்லாத விஷயங்களால் நேரிடும் இழப்புகள்கூட நன்மை தரும்’ என்ற பாடத்தை அத்தி மரம் கற்றுக்கொண்டது.

# வெற்றிக்கு வழிகாட்டுங்கள்!

தனியாக ஒற்றை மனிதர் பெறுவதல்ல வெற்றி! நீங்கள் பணிபுரிவது ஒரு நிறுவனத்தில் என்றாலும், செய்வதும் வியாபாரம் என்றாலும், ஈடுபட்டிருப்பது தொழில் என்றாலும், உங்களுக்குள் இருக்கும் வெற்றித் தாகத்தை அங்கிருக்கும் அத்தனை பேருக்கும் தந்தால்தான் வெற்றி சாத்தியம். அதற்கான சில வழிகள்:

● ஒரு குழுவாக இணைந்து செய்யும் ஒரு வேலையில், என்ன பலன் கிடைக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிய வேண்டும். இல்லாவிட்டால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கற்பனை செய்துகொள்வார்கள். சிலர், ‘இந்த வேலையில் எந்தப் பலனும் இல்லை. நமக்கு இங்கே எதிர்காலமே இல்லை’ என்று பயந்து வெளியேற நினைக்கலாம். இன்னும் சிலர், ‘நாம் நிறைய லாபம் சம்பாதித்துத் தருகிறோம். ஆனால், நமக்கு அந்த அளவுக்கு எதுவும் கிடைக்கவில்லை’ என்று நினைத்து விரக்தியில் இருக்கலாம்.

● ஓநாய்கள் காட்டுக்குள் ஒரு கூட்டமாகவே செல்லும். ஓநாய்க் கூட்டத்தின் பாதுகாப்பு விதிமுறைகள் சிறப்பானவை. இருப்பதிலேயே வயதான, நோய்வாய்ப்பட்ட ஓநாய்கள்தான் கூட்டத்தில் முதலாவதாகச் செல்லும். அவற்றின் வேகத்துக்கு ஏற்றபடிதான் மற்ற ஓநாய்கள் நடக்கும். அவற்றைத் தொடர்ந்து வலிமையான ஐந்தாறு ஓநாய்கள் செல்லும், கூட்டத்தின் முன்பகுதியின் பாதுகாப்பை இவை உறுதி செய்கின்றன. குட்டிகள், பெண் ஓநாய்கள் போன்றவை நடுவில் இருக்கும். பின்வரிசையில் வலிமையான நான்கைந்து ஓநாய்கள் இருக்கும். இவை பின்னாலிருந்து வேட்டை விலங்குகள் தாக்காமல் பாதுகாக்கும். கடைசியாகவே, கூட்டத்தின் தலைவன் வரும். எந்த ஓநாயும் கூட்டத்திலிருந்து பிரிந்து பின்தங்கி விடாதபடி இது கண்காணிக்கும். எல்லாத் திசைகளிலும் ஓடி, கூட்டத்தை ஒழுங்குபடுத்தும். தலைவன் என்பவன் எப்போதும் முன்வரிசையில் நின்று வழிநடத்த வேண்டிய அவசியம் இல்லை. தேவை ஏற்படும்போது பின்னால் நின்று கண்காணிக்கவும் வேண்டும் என்பதை உணர்த்துகின்றன ஓநாய்கள். இந்த ஓநாய்க்கூட்டம் போல, ஒரு வேலையில் ஒவ்வொருவரின் திறமைக்கும் உழைப்புக்கும் ஏற்றபடி இடத்தைக் கொடுக்க வேண்டும். எல்லோரிடமும் யோசனை கேட்கலாம். ஆனால், நினைத்த திசையில் போவதற்கு எது சரியோ, அதை மட்டுமே செயல்படுத்த வேண்டும்.

● தலைமை ஏற்பவர்கள் சில சந்தர்ப்பங்களில் முன்வரிசையில் நிற்கவும் வேண்டியிருக்கும். இதற்கு உதாரணமாக அப்துல் கலாம் அவர்கள் ஒரு சம்பவத்தைச் சொல்வார்கள். இளம் விஞ்ஞானியாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் கலாம் இணைந்தபோது, அந்த நிறுவனத்தின் தலைவராக இருந்தவர் சதீஷ் தவான். கலாமைவிட மூத்த விஞ்ஞானிகள் பலர் இருந்தாலும், ராக்கெட் தயாரிக்கும் திட்டத்துக்கு கலாமையே தலைவராக நியமித்தார் சதீஷ் தவான். அவருக்கு கலாம் மீது அவ்வளவு நம்பிக்கை. ஆனால், முதல் முயற்சியில் இந்திய ராக்கெட் தோல்வியடைந்து விண்ணுக்குச் செல்லாமல் கடலில் விழுந்தது. அந்த முயற்சியின் முடிவில் கலாம் கலங்கி நின்றார். அப்போது நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில், கலாமை பின்னுக்குத் தள்ளிவிட்டு சதீஷ் தவான் முன்னால் வந்து நின்றார். “தோல்விக்கு நாங்கள் கூட்டுப்பொறுப்பு ஏற்கிறோம். அடுத்த முயற்சியில் நிச்சயம் ஜெயிப்போம்’’ என்றார். சில மாதங்களில் கலாம் குழுவினர் இரண்டாவது முறையாக ராக்கெட் தயாரித்தனர். இம்முறை அது வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், சதீஷ் தவான் ஒதுங்கி நின்று கலாமை முன்னால் அனுப்பி





வெற்றி குறித்து பேசச் சொன்னார். வெற்றியிலும் தோல்வியிலும் தலைவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கான உதாரணம் இது. ஒருவர் உழைப்பில் கிடைத்த சாதனைக்கான பெருமை, அவருக்கே கிடைக்க வேண்டும்.

● 'நான் சொல்வதை மட்டும் நீ செய்தால் போதும், கேள்விகள் கேட்காதே' என்று கட்டளை போடுவது எந்த வேலையையும் சிறப்பாகச் செய்ய உதவாது. மருந்து கம்பெனி ஒன்றில் மாத்திரை தயாரிக்கும் பணியில் ஒருவர் இருக்கிறார். 'தினமும் ஆயிரம் மாத்திரைகளை நீங்கள் தரம் பார்த்து, மெஷின் மூலம் முறையாக அவற்றை பேக்கிங் செய்து அனுப்ப வேண்டும்' என்று சொன்னால், அவர் எந்திரம் போலவே வேலை செய்வார். 'உலகம் முழுக்க பல்லாயிரம் நோயாளிகளுக்கு ஜுரத்திலிருந்து நிவாரணம் தரும் வேலையை நாம் செய்கிறோம். ஒவ்வொரு மாத்திரையும் தரமாக இருந்தால்தான், அதைச் சாப்பிடுகிறவர் நோயிலிருந்து நிவாரணம் பெறுவார்' என்று சொன்னால், அவர் வேலைத்திறனே மாறும். ஒருவர் செய்யும் வேலை எப்படிப்பட்டது, அவரிடம் அந்த வேலையில் என்ன எதிர்பார்க்கிறோம் என்பதைத் தெளிவாகச் சொல்லுங்கள்.

● ஒரு குழுவில் இருக்கும் எல்லோருக்கும் ஒரே மாதிரியான எண்ணம் இருக்க வேண்டும். தரமான ஒரு தயாரிப்பை வழங்க வேண்டும் என்றால், மூலப்பொருள் தரமாக இருக்க வேண்டும். அதை வைத்து உலகத்தரமான தொழில்நுட்பத்தில் தயாரிப்பை உருவாக்க வேண்டும். தரப்பரிசோதனையும் கடுமையாக இருக்க வேண்டும். நிறுவனம் எதிர்பார்க்கும் தரத்தில் எதையும் தயாரிக்க, மேல்மட்டத்திலிருந்து கீழ்மட்ட ஊழியர்கள் வரை எல்லோரும் ஒரே மாதிரி எண்ணத்துடன் உழைக்க வேண்டும்.

● ஒன்றாக இணைந்து ஒரு வேலையைச் செய்கிறீர்கள் என்றால், அந்தக் குழுவில் எல்லோருக்குள்ளும் பரஸ்பரம் நம்பிக்கை இருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் அவர் செய்யும் வேலையில் திறமை இருப்பதை உறுதி செய்ய வேண்டும். எந்தச் சூழலிலும் அவரால் சிறப்பாக உழைக்க முடியும் என்ற நிலை வர வேண்டும். இது இருந்தால், அந்தக் குழுவின் வெற்றியைத் தடுக்க முடியாது.

● 'காலுக்குக் கீழே போட்டு, வீட்டுக்கு வெளியில் வாசலில் விட்டுச் செல்லும் பொருள்தானே' என்று காலணியைத் தரமில்லாததாகச் செய்ய முடியாது. அது மென்மையாக இல்லாவிட்டால், காலில் காயம் ஏற்படும். வசதியாக இல்லாவிட்டால் நடக்கவே முடியாது. ஒரு பொருளை உருவாக்குகிறவர், அதை உயர்தரமாகச் செய்ய வேண்டும். அவர்கள் சிறப்பாகச் செய்யும்போது பாராட்டுத் தெரிவித்து, "இதைவிடவும் சிறப்பாக உங்களால் செய்ய முடியும்" என்று சொல்லிச் சொல்லி அவர்களை மேம்படுத்த வேண்டும். அவர்கள் தரமாகச் செய்யவில்லை என்றால், அதை வெளிப்படையாகச் சொல்லி அவர்களை நெறிப்படுத்த வேண்டும்.

● மிகப்பெரிய சாதனைகளைச் செய்தால் மட்டுமே பாராட்ட வேண்டும் என்று இல்லை. ஒவ்வொருவரும் செய்யும் சின்னச்சின்ன சாதனைகளும் கொண்டாடத் தகுந்தவையே! எப்போதும் பாராட்டு மொழிகள் கேட்டுப் பழகியவர்கள், இன்னமும் நிறைய கேட்க வேண்டும் என்று உற்சாகமாக உழைப்பார்கள். ●



# வெற்றிக்கான தங்க விதிகள்!

உலகம் முழுக்க இருக்கும் சினிமா ரசிகர்களில் ஜாக்கி சான் பெயரை அறியாதவர்கள் இருக்க முடியாது. ஆங்கிலப் படங்கள் என்றாலே அமெரிக்காவில் தயாராகும் ஹாலிவுட் படங்கள்தான் என்ற நிலையைத் தனிமனிதராக மாற்றியவர். ஆசியாவிலிருந்து கிளம்பிப் போய் உலகையே வெற்றிகொண்டவர். எப்படி இதை அவர் சாத்தியமாக்கினார்?

ஜாக்கி சான் நடிக்க வந்த புதிதில், ஹாங்காங்கில் எடுக்கப்பட்ட ஆங்கிலப் படங்களுக்கு அவ்வளவாக வரவேற்பு கிடைக்கவில்லை. அமெரிக்காவில் இருந்த அளவுக்கு நவீனத் தொழில்நுட்பக் கருவிகள் அவர்களிடம் இல்லை. நல்ல படங்களை உருவாக்கும் தொழில்நுட்பக் கலைஞர்களும் இல்லை. திறமையான நடிகர்களும் இல்லை. ஹாங்காங் படங்களை மேற்கத்திய உலகம் ஏளனமாகப் பார்த்தது.

'இத்தனை பலவீனங்களை வைத்துக்கொண்டு நாம் எப்படி ஹாலிவுட் மார்க்கெட்டில் போட்டி போடுவது' என்று ஜாக்கி சான் சிந்தித்தார். 'ஹாலிவுட் படங்களால் தரமுடியாத எந்த விஷயத்தை தன்னால் தர முடியும்' என்று யோசித்தார். அவருக்கு முன்பாக ஹாங்காங் பகுதியிலிருந்து சாதித்தவர் புரூஸ் லீ மட்டும்தான்! சீனர்களின் பாரம்பரிய தற்காப்புக் கலையான குங்பூ சண்டை மூலமே புரூஸ் லீ புகழ்பெற்றார்.

ஆனால், புரூஸ் லீ போட்ட சண்டைகள் வழக்கமானவை. மையமாக அவர் நிற்க, சுற்றிலும் வில்லன்கள் சூழ்ந்திருப்பார்கள். ஒவ்வொருவராக வந்து அவரிடம் சண்டை போட்டு அடி வாங்கிக்கொண்டு போவார்கள். கிட்டத்தட்ட இதே மாதிரி சண்டை, ஹாலிவுட் படங்களிலும் இருக்கும். குங்பூ ஸ்டைல் மட்டுமே வித்தியாசம். ஆனால், நிஜத்தில் சண்டைகள் இதுபோல இருக்காது அல்லவா? எல்லோரும் ஒரே நேரத்தில் கும்பலாகச் சூழ்ந்துகொண்டுதானே அடிப்பார்கள்!

நிஜ சண்டைகளைப் போலவே அதே வேகத்தில் சண்டைக்காட்சிகளைத் தன் படங்களில் தருவதற்கு முடிவெடுத்தார் ஜாக்கி சான். அவரது திரைப்பட சண்டைகள் அதுவரை இல்லாத புதுமையாக இருந்தன. வில்லன்கள் கும்பலாகத் துரத்த, ஓடிக்கொண்டே அவர்களுடன் சண்டை போடுவார் ஜாக்கி சான். மேலேயிருந்து குதிப்பார், கீழேயிருந்து உயரத்துக்குத் தாவுவார், ஏதேதோ சந்துபொந்துகளில் நுழைந்து வெளியில் வருவார், இதற்கிடையே குங்பூ ஸ்டைலில் குத்துகள் விடுவார்.

இதையெல்லாம் தாண்டி ஆபத்தான சாகசங்களிலும் ஈடுபட்டார். கட்டடங்களின் உச்சியிலிருந்து சண்டை போட்டபடி ஒரு பில்டிங்கிலிருந்து இன்னொரு பில்டிங் மீது தாவிக் குதிப்பார். எந்தப் பாதுகாப்பு ஏற்பாடும் இல்லாமல் சர்வசாதாரணமாக இதையெல்லாம் செய்தது, அவரை துணிச்சலான ஆக்ஷன் நடிகராக உலகத்துக்குக் காட்டியது. 'போலீஸ் ஸ்டோரி' படத்தில் ஒரு மலை விளிம்பிலிருந்து ஹெலிகாப்டர் மீது குதித்து சண்டை போடுவார், 'Who am I' படத்தில் அடுக்குமாடிக் கட்டடம் ஒன்றிலிருந்து கீழே குதிப்பார். இது சினிமா சண்டைக்காட்சிகளில் ஒரு கின்னஸ் சாதனை.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஜாக்கி சான் சண்டைக்காட்சிகளுக்கு ரசிகர்கள் ஆனார்கள். ஹாலிவுட் படங்களில் சண்டைக்காட்சிகளை வேகமானதாகக் காட்டுவதற்கு, கேமராவை நகர்த்திக் காட்டி ஏமாற்றுவார்கள். ஆனால், ஜாக்கி சான் நிஜமாகவே வேகமாகச் சண்டை போட்டார். அதற்கு ஹாலிவுட் படங்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. தன் 47 வயது வரை சண்டைக்காட்சிகளில் அவர் யாரையும் தனக்குப் பதிலாக டூப்பாகப் பயன்படுத்தியதில்லை.

கிட்டத்தட்ட அவர் உடலில் அத்தனை எலும்புகளுமே சண்டைக்காட்சிகளில் நடித்தபோது உடைந்து கட்டுப் போட்டு சீரமைக்கப்பட்டதாகச் சொல்வார்கள்.

“எப்படி இந்தச் சண்டைக்காட்சிகளை எடுத்தீர்கள்?” என்று ஹாலிவுட்டின் பிரபல இயக்குநர் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் ஆச்சர்யத்துடன் கேட்டபோது, “ஓடுவேன், குதிப்பேன், சண்டை போடுவேன்” என்று சொன்னார் ஜாக்கி சான். ஹாலிவுட் நடிகர்களே தேடிவந்து ஜாக்கி சான் படங்களில் நடித்தார்கள், அவரை அமெரிக்காவுக்குக் கூப்பிட்டு கௌரவ ஆஸ்கர் விருது கொடுக்கும் அளவுக்கு அவர் புகழ் உயர்ந்தது.

இப்போது ஆங்கில ஆக்‌ஷன் படங்கள் இரண்டே வகைதான். ஒன்று, ஜாக்கி சான் எடுத்த உயிரோட்டமான ஆக்‌ஷன் படங்கள். இன்னொன்று, அமெரிக்காவில் எடுத்த சுமாரான படங்கள். தன் தனித்தன்மையால் உலகம் அறிந்த வெற்றியாளராக மாறினார் ஜாக்கி சான்.

அதே சீனாவைச் சேர்ந்தவர் தாவோ ஜு காங். 2,500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இவர் அமைச்சராகவும் ராணுவத் தளபதியாகவும் இருந்தவர். மூன்று முறை நாட்டிலேயே பெரும் பணக்காரராக உயர்ந்து, ஒவ்வொரு முறையும் தான் சம்பாதித்த அனைத்தையும் தானம் செய்தவர். தொழில் மற்றும் வியாபாரத்தில் வெற்றி பெறுவதற்கான தங்க விதிகளை இவர் உருவாக்கித் தந்திருக்கிறார். அவற்றில் சில:



- மனிதர்கள் ஒவ்வொருவரின் குணத்தையும் புரிந்துகொள்ளுங்கள். அனுபவத்திலிருந்து இதற்கான பாடங்கள் கிடைக்கும்.
- இவரால் லாபம் கிடைக்கும், இவரால் பயனில்லை என்று எவரைப் பற்றியும் முன்கூட்டியே முடிவுகள் எடுக்காதீர்கள். மனிதர்களை சமமாக நடத்துங்கள்.
- வாழ்க்கையிலும் தொழிலிலும் ஒரே மாதிரி கவனம் இருக்கட்டும். ஒன்றை இழந்து இன்னொன்றைப் பெற முடியாது.
- வாழ்வில் எல்லா விஷயங்களிலும் ஒழுங்கைக் கடைப்பிடியுங்கள். ஒழுங்கற்ற பழக்கங்கள் கொண்ட மனிதர்களுக்கு மதிப்பு இருக்காது.
- எந்தச் சூழலுக்கும் ஏற்றபடி உங்களை மாற்றிக்கொள்ளத் தயாராக இருங்கள்.
- கடன்களில் கட்டுப்பாடு வேண்டும். உங்களுக்கு வர வேண்டிய பணத்தை வசூலித்துவிடும் திறமை இருக்க வேண்டும்.
- எந்த வேலையை யார் சிறப்பாகச் செய்வார் என்று பார்த்து அவர்களிடம் கொடுங்கள். ஒவ்வொருவரிடமிருந்தும் மிகச் சிறந்த உழைப்பை வாங்குங்கள்.
- நீங்கள் கொடுக்கும் பொருட்களின் மதிப்பு குறித்து வாடிக்கையாளர்களிடம் நீங்கள்தான் உணர்த்த வேண்டும். மதிப்பு தெரிந்த வாடிக்கையாளர்களே நிலைப்பார்கள்.
- தரமான பொருட்களை வாங்குவதில் திறமை பெறுங்கள். எந்த நேரத்தில் எதை வாங்கலாம் என்பதில் தெளிவு இருக்க வேண்டும்.
- எந்தப் பகுதியில் எது நன்கு விற்கும், எந்த சீஸனில் எதை விற்றால் லாபம் கிடைக்கும் என்பதிலும் அனுபவம் மூலம் நிபுணத்துவம் பெற வேண்டும்.
- தரமான வர்த்தகத்துக்கு என்று விதிகளை வரையறுத்து, அவற்றைப் பின்பற்ற வேண்டும். அதுவே எல்லோருடனும் நல்லுறவை வளர்க்க உதவும்.
- கஞ்சத்தனம் வேண்டாம், மனிதாபிமானம் இல்லாத தொழிலுக்கு மதிப்பு இருக்காது. தற்பெருமைக்காக ஆடம்பரச் செலவு செய்வதும் வேண்டாம்.
- தொழில் மற்றும் வியாபாரத்துக்கு நேர்மையும் உண்மையுமே அடிப்படைகள். இவற்றை மறந்தால் பாதிப்பு வரும்.
- கடன் கிடைக்கிறதே என்று கட்டுப்பாடு இல்லாமல் வாங்காதீர்கள், சறுக்கினால் அதில் மூழ்கிவிடுவீர்கள்.
- வாய்ப்புகளுக்கான காலம் கனியும் வரை காத்திருங்கள். வரும் வாய்ப்புகளைத் தவற விடாதீர்கள்.
- கண்மூடித்தனமாக விலையைக் குறைத்து விற்காதீர்கள். அதில் எல்லோருக்கும் இழப்பு ஏற்படும்.
- பணம் வரும்போது சேமிக்கத் தவறாதீர்கள். அதுதான் புதிய முதலீடுகளுக்கு உதவும்.

# வெற்றியை அனுபவியுங்கள்!

'ஒரே முயற்சியில் வெற்றி... அதன்பின் ஓஹோ என்று வாழ்க்கை...' இதுதான் பலரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. ஆனால், மகத்தான சாதனையாளர்கள்கூட ஒரே முயற்சியில் வெற்றியை ருசித்தது இல்லை. எவரெஸ்ட் சிகரத்தை முதன்முதலில் அடைந்தவர்கள் எட்மண்ட் ஹிலாரி மற்றும் டென்சிங் ஆகியோர்தான். ஆனால், அவர்கள் தங்களின் முதல் முயற்சியிலேயே வெற்றி பெறவில்லை. கடும் பனிப்பொழிவைச் சமாளிக்க முடியாமல் பாதியில் திரும்ப நேரிட்டது.

'நீ ஒரு சிகரம். எப்போதும் இதே உயரத்துடன்தான் இருப்பாய். ஆனால், நான் மனிதன். இன்று இருப்பதைவிட வளர்ச்சி அடைவேன். அப்போது வந்து உன்னை வெற்றி கொள்வேன்' என்று சவால் விட்டுவிட்டு வந்து பயிற்சி எடுத்தார் எட்மண்ட் ஹிலாரி. அடுத்த முயற்சியில் இருவரும் ஜெயித்தனர்.

அமெரிக்காவின் மகத்தான ஜனாதிபதியாகக் கருதப்படும் ஆபிரகாம் லிங்கன், தான் இழந்த நாட்டை மீட்கப் போராடிய ராபர்ட் புரூஸ், இந்தியாவுக்குக் கடல்வழி கண்டுபிடித்த வாஸ்கோட காமா... இப்படி பலரும் முதல் முயற்சியில் வெற்றி வாய்ப்பை இழந்தவர்கள்தான்.



மிகச் சிறந்த சாதனையாளர்கள்கூட, ஆரம்பகாலத்தில் தடுக்கி விழுந்திருக்கின்றனர். 'ஃபோர்டு' என்ற கார் நிறுவனத்தை உருவாக்கி, புதிய கார்களை உலகத்திற்கு அறிமுகப்படுத்திய கோடீஸ்வரர் ஹென்றி ஃபோர்டு. அவர் முதல் காரை உருவாக்கும்போது, ரிவர்ஸ் கியரைப் பொருத்த மறந்துவிட்டார்.

ஓரிரு முறை முயற்சி செய்துவிட்டு, 'இதற்கு மேல் என்னால் முடியாது' என்று சொல்பவர்கள் சராசரி மனிதர்கள். 'என் லட்சியத்தை எட்டும் வரை முயற்சி செய்துகொண்டே இருப்பேன்' என்று சொல்பவர்களே சாதனையாளர்கள்.

பின்வாங்கி ஒதுங்கியவர்களையோ, தோல்வியால் துவண்டவர்களையோ, இந்த உலகம் நினைவில் வைத்திருப்பதில்லை. தோல்வி ஒருவருக்கு புதிய உற்சாகத்தையும் வைராக்கியத்தையும் கொடுக்க வேண்டுமே தவிர, விரக்தியைக் கொடுக்கக்கூடாது.

ஒருமுறை முயற்சி பலனளிக்காமல் போகும்போது, 'உன்னால் இது முடியாது' என்று எதிர்மறையாகப் பேசி தடை போடுகிறவர்களால் நிறைந்தது இந்த உலகம். ஆனால், 'உன்னால் இதைச் செய்ய முடியாது' என்று பிறர் சொன்ன செயலைச் செய்து காட்டுவதில் இருக்கிறது இன்பம். உறுதியான முயற்சி இருந்தால், எதுவுமே நம்மைக் கட்டிப் போடாது. மிகச்சிறந்த அமெரிக்க ஜனாதிபதிகளில் ஒருவராகக் கருதப்பட்ட ஃப்ராங்ளின் ரூஸ்வெல்ட், சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி இரண்டாம் உலகப் போரின்போது அமெரிக்காவை வழி நடத்தினார். வெற்றி கண்டார்.

வெற்றி கிடைக்கும் ஒவ்வொரு நிமிடமும் நாம் மகிழ்ந்து போகிறோம். உலகமே நம் கைக்குள் வசப்பட்டது போலத் தோன்றும். பார்க்கின்ற எல்லாமே நமக்கு மகிழ்ச்சியைத் தரும். இந்த அனுபவத்தைப் பெறுவதற்காகவே எப்போதும் வெற்றி பெறத் தோன்றும்.

விம்பிள்டன் டென்னிஸில் 9 முறை கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்ற மார்ட்டினா நவரத்திலோவா ஒவ்வொரு வெற்றிக்குப் பின்பும் சொல்வார். "எனக்கு ஒரு வயது குறைந்திருக்கிறது" என்று. எல்லோரும் ஓய்வுபெறும் வயதில் டென்னிஸ் விளையாடிய இந்திய வீரர் லியாண்டர் பயஸ் இதையே சொன்னார். குழந்தை பெற்ற பிறகும் டென்னிஸ் விளையாட வந்து வெற்றியை ருசித்த செரினா வில்லியம்ஸ், "தற்போது இளமையாக உணர்கிறேன்" என்றார்.

வெற்றியை அனுபவிக்கும்போது, மற்ற எல்லாமே சாதாரணமாகத் தெரியும்!




# வெற்றி நிச்சயம்!

- பிரச்னைகள் நம்மை நமக்கே அடையாளம் காட்டும் கண்ணாடிகள். அவற்றுக்கு முகம் காட்டுங்கள்... புறமுதுகு காட்டாதீர்கள்!
- எவ்வளவு மோசமான சூழலிலும் பொறுமையாகக் காத்திருங்கள். கடைசி நிமிடத்தில் முடிவே மாறிய ஆட்டங்கள் இங்கு நிறைய உண்டு.
- காலங்களும் நிலையானவை அல்ல. காயங்களும் நிரந்தரமானவை அல்ல. எல்லாமே மாறும் என்ற நினைப்புடன் இருங்கள்.
- சில தவறுகள், 'நாம் யார்' என்பதைச் சொல்லிவிடும். சில தவறுகள், 'நாம் யாராக இருக்கவேண்டும்' என்பதைச் சொல்லித் தரும்.
- நிறை, குறை இரண்டும் கலந்ததுதான் வாழ்க்கை. நிறையை மட்டும் நினைவில் வையுங்கள், வாழ்க்கையை வென்றுவிடலாம்.
- தோல்விகள் அவமானம் அல்ல; அவையும் ஒருவகை வருமானம். தோல்வியை ஒப்புக்கொள்ளாதவர்களே, மீண்டும் மீண்டும் தோற்கின்றனர்.
- முயற்சிகள் கவனிக்கப்படுவதில்லை. முடிவுகள் மட்டுமே விமர்சனத்திற்கு உள்ளாகின்றன. எனவே, முடிவில் வெற்றியை அடையும் முயற்சிகளைத் துணிந்து எடுங்கள்.
- வலிமைமிக்க ஆயுதம், புன்னகையுடன் கூடிய மௌனம். தோல்வியையே சந்திக்காத ஆயுதம், பொறுமை.
- 'முயற்சியைக் கைவிடு' என உலகமே சொன்னாலும், 'இன்னும் ஒருமுறை முயற்சி செய்து பார்' என உங்களுக்குள் ஒரு குரல் சொல்லும். அந்த நம்பிக்கை வார்த்தைகளைப் புறக்கணிக்காதீர்கள்.
- குழப்பமான முடிவெடுத்து வேகமாக ஓடுவதைவிட, நம்பிக்கையுடன் முடிவெடுத்து நிதானமாக நடந்து செல்வது மேல்!
- வாழ்க்கையில் நமக்கு இரண்டு வாய்ப்புகள் உள்ளன... ஒன்று, உங்களால் மாற்ற முடியாதவற்றை ஏற்றுக்கொள்வது. மற்றொன்று, ஏற்றுக்கொள்ள முடியாதவற்றை மாற்றிக்காட்டுவது!
- ஒரு நல்ல நாள் மகிழ்ச்சி தரும். கெட்ட நாள் அனுபவம் தரும். மோசமான நாள் பாடம் கற்றுத் தரும். எனவே எந்த நாளும் நமக்கு இனிய நாளே!
- வெற்றி வரும்போது பணிவு அவசியம். தோல்வி வரும்போது பொறுமை அவசியம். எதிர்ப்பு வரும்போது துணிவு அவசியம். எது வந்தபோதும் நம்பிக்கை அவசியம்.
- உங்களுக்கு எதையாவது பிடிக்கவில்லை என்றால் அதை மாற்றுங்கள். உங்களால் அதை மாற்ற முடியவில்லை என்றால் உங்கள் அணுகுமுறையை மாற்றுங்கள்.
- மகிழ்ச்சியையும் நிம்மதியையும் வெளியில் தேடுபவர்கள், இறுதிவரை தோற்றுக்கொண்டே இருப்பார்கள். உங்களுக்குள் அவற்றைக் காணப் பழகினால், எல்லா நாளும் வெற்றியே!
- வெற்றியும் நிலையானதல்ல, தோல்வியும் நிரந்தமல்ல. என்றும் நிரந்தரமானது நம் திறமையும் நம்பிக்கையும்தான். அவற்றை எப்போதும் இழக்காதீர்கள்.
- நீங்கள் ஜெயிக்க விரும்பினால், முதலில் உங்களுக்குள் இருக்கும் அவநம்பிக்கையை அகற்றுங்கள். அதுவே உங்களை வெற்றியாளர் ஆக்கிவிடும்.
- உங்களைச் சுற்றி இருப்பவர்கள் சரியானவர்களாக இருந்தால், உங்களால் எதையும் செய்து முடிப்பது சாத்தியம்தான்.
- இழந்தது எதுவாயினும், அதைவிடச் சிறந்தது கிடைக்கும் என நம்பிக்கை கொள்ளுங்கள்.
- வெற்றி என்னும் மாயக் கதவைத் திறக்கும் சாவி, பொறுமை மட்டுமே! பொறுமையுடன் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்.
- வாழ்வின் கடினமான நாட்களில் பாடம் கற்றுக்கொள்ளுங்கள். இனிமையான நாட்களை அடைவதற்கு அவை உதவும். ●



# கவனம் சிதறாத உழைப்பு!

பிரான்ஸ் நாட்டை ஆட்சி செய்து, ஐரோப்பா முழுக்கப் பல வெற்றிகளைக் குவித்த மாவீரன் நெப்போலியன் தனது இறுதிக் காலத்தில் வாட்டர்லூ போரில் தோற்றுவிட்டார். அவரைக் கைது செய்த பிரிட்டிஷ் அரசு, ஒரு தனித் தீவில் சிறை வைக்க அனுப்பியது. அங்கு இருந்த பிரிட்டிஷ் படைத் தளபதிகள், 'உலகமே வியக்கும் அளவுக்கு வெற்றிகளைக் குவித்த மாவீரன் நெப்போலியன் எப்படி இருப்பான்' என்று பார்க்க மிகவும் ஆர்வமாகக் காத்திருந்தார்கள். ஆறடி உயரமும் கம்பீரமான தோற்றமும் உறுதியான நடையுமாக ஓர் உருவத்தை அவர்கள் கற்பனை செய்து வைத்திருந்தனர்.

ஆனால், நெப்போலியன் சராசரி மனிதர்களைவிடவும் குள்ளமாக இருப்பார். நீண்ட கடல் பயணத்தின் காரணமாக களைத்துப் போயிருந்தார். பல மாதங்கள் போர்க்களத்திலேயே இருந்ததால், உடலில் ஏராளமான பிரச்னைகள். உடல் மெலிந்து நோஞ்சானாக, கால்களை விரித்தபடி தள்ளாடி நடந்து வந்த நெப்போலியனைக் கண்டதும் அவர்களுக்குப் பெருத்த ஏமாற்றம் ஆகிவிட்டது.

'இவனையா மாவீரன் என உலகம் கொண்டாடியது' என்று நினைத்தார்கள். நெப்போலியனை அவமானப்படுத்தும் எண்ணம் அவர்களுக்கு வந்தது. ஒரு விளையாட்டு காட்டி கேலி செய்யத் தீர்மானித்தார்கள். ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்தார்கள். அந்த விருந்தில் நெப்போலியன் அமரும் நாற்காலிக்கு அருகே ஒரு டம்மி வெடிகுண்டு புதைக்கப்பட்டது. பெரிதாகச் சத்தம் எழுப்பும். ஆனால், எந்த ஆபத்தையும் ஏற்படுத்தாத குண்டு.

விருந்து தொடங்கியது. எல்லோரும் சாப்பிட்டு முடித்து, கடைசியாக ஜூஸ் குடிக்கத் தொடங்கும்போது மிகப்பெரிய சத்தத்துடன் குண்டு வெடித்தது. வெடிகுண்டைப் புதைத்து வைத்த பிரிட்டிஷ் தளபதிகள்கூட அந்தச் சத்தத்தில் மிரண்டு போய், தன்னிச்சையாகத் தங்கள் கைகளில் இருந்த கோப்பைகளைக் கீழே போட்டுவிட்டனர். ஆனால், நெப்போலியன் எந்தச் சலனமும் இல்லாமல் ஜூஸ் குடித்துக் கொண்டிருந்தார்.

"உன் காலடியில் குண்டு வெடித்தபோதும் நீ பதறவே இல்லையே... ஏன்?" என்று ஆச்சர்யத்துடன் அவரிடம் கேட்டார்கள் அந்தத் தளபதிகள்.

அதற்கு நெப்போலியன் சொன்ன பதிலை, வாழ்வில் வெற்றி பெற நினைக்கும் ஒவ்வொருவரும் நினைவில் வைப்பது நல்லது. ''எப்போது என் கைகளில் ஜூஸ் டம்ளரை எடுத்தேனோ, அந்த நிமிடத்திலிருந்து என் வாழ்க்கையின் ஒரே லட்சியம்



அந்த டம்ளரில் உள்ள ஜூஸைக் குடிப்பதுதான். அது முடியும்வரை, உலகத்தில் நடக்கும் எந்த விஷயம் பற்றியும் எனக்கு அக்கறை கிடையாது. என் கவனம் எந்தத் திசையிலும் சிதறாது” என்றார் நெப்போலியன்.

‘இன்றைய வாழ்க்கைச்சூழலில், கடின உழைப்பு மட்டுமே போதாது. புத்திசாலித்தனமாக உழைத்தால் மட்டுமே ஜெயிக்க முடியும்’ என நிறைய பேர் நினைக்கிறார்கள். ஆனால், அது மட்டுமே போதாது. மன உறுதியும் ஒழுக்கமும் கொண்ட ஒருவர், தன் இலக்கில் மட்டுமே முழுமையாக கவனம் செலுத்தும்போது மட்டுமே, வெற்றி அவர் வசமாகிறது.


இன்றைய வாழ்க்கைச்சூழலில் கிடைத்திருக்கும் வசதிகள் அனைத்தும் மனிதர்களைச் சோம்பலில் தள்ளியிருக்கின்றன. இன்னொரு பக்கம் கவனத்தைச் சிதற வைக்கவும் ஏராளமான விஷயங்கள் வந்துவிட்டன. சமூக வலைதளங்கள், டி.வி., கம்ப்யூட்டர் கேம்கள், வீடியோக்கள் என 24 மணி நேரமும் பொழுதுபோக்கு தருவதற்கு அத்தனை அம்சங்கள் இருக்கின்றன. இவற்றைத் தாண்டி ஒருவர் முழுக் கவனத்துடன் தன் இலக்கை நோக்கிப் பயணம் செய்வது சாதாரண விஷயம் இல்லை. ஆனால், தங்கள் இலக்கிலிருந்து திசைமாறாமல் உழைத்து வெற்றியடைந்தவர்கள்தான் இந்த எல்லாக் கருவிகளையுமே கண்டுபிடித்தார்கள்.

தாமஸ் ஆல்வா எடிசன் தன் இலக்கில் கவனமாக இருந்ததால்தான், ஆயிரம் முயற்சிகளில் தோற்ற பிறகும் மின்சார விளக்கைக் கண்டுபிடித்தார். ‘இது சாத்தியமில்லை’ என மூன்று முயற்சிகளுக்குப் பிறகு அவர் நினைத்திருந்தாலோ, 999 முயற்சிகளுக்குப் பிறகு நினைத்திருந்தாலோ, அவர் மின்சார விளக்கை நமக்கு ஒரு புதிய கண்டுபிடிப்பாக அளித்திருக்க முடியாது. தோல்விகளைத் தாண்டி, ‘எப்படியும் இதில் நாம் வெற்றி பெறுவோம்’ என்ற நம்பிக்கை அவரைத் தொடர்ந்து இயக்கிக்கொண்டிருந்தது.

**கவனச்சிதறல் இல்லாமல் வெற்றியை அடைய என்ன செய்ய வேண்டும்?**

● நீங்கள் அடைய விரும்புகிற குறிக்கோள், உயர்ந்ததாக இருக்க வேண்டும். வெறும் எண்ணத்தோடு நின்றுவிடாமல், அந்த எண்ணத்துக்குச் செயல்வடிவம் கொடுக்க என்ன செய்யவேண்டும் என்று திட்டமிட்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற இடைவிடாமல் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

● தளராத ஊக்கம் இருந்தால்தான் இடைவிடாத முயற்சிகளை நீங்கள் செய்ய முடியும். தொழில், வேலை, வியாபாரம் என எதுவாக இருந்தாலும், எதைச் செய்ய விரும்புகிறீர்களோ, அதில் அதிக விருப்பம் கொண்டு உழைக்க வேண்டும். விருப்பமில்லாமல் வாழ்க்கையில் நல்ல திருப்பமில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.



● உங்கள் இலக்கு மிகப் பெரியதாக இருந்தால், அதற்கான காத்திருப்பு காலமும் நீண்டதாக இருக்கும். ஒரு வாரத்திலோ, ஒரே மாதத்திலோ உயர்ந்துவிட வேண்டும் என்று நினைத்துப் பார்க்கக்கூடாது. லட்சியம் வெற்றி பெறும்வரை பொறுமையாக இருக்கவேண்டும். ‘சீச்சீ, இந்தப் பழம் புளிக்கும்’ என்று நரி திராட்சைத் தோட்டத்தை வெறுத்து ஓடிப் போன கதையாக பின்வாங்கிவிடக் கூடாது.

● அடிக்கடி மனம் மாறக்கூடாது. ‘இதில் நான் உயர்வடைவதற்கு கால தாமதம் ஆகும் போலத் தெரிகிறது’ என்று வேறு தொழில் அல்லது வேலையைத் தேடிச் சென்று விடாதீர்கள். ஆழமாகத் தோண்டும் சுரங்கங்களில்தான் மதிப்புமிக்க வைரம் கிடைக்கிறது.

● உங்கள் செல்போனைப் பொழுதுபோக்கவும் பயன்படுத்தலாம். படிப்பது, தினசரி வேலைகளைத் திட்டமிடுவது என ஆக்கப்பூர்வமாகவும் பயன்படுத்தலாம். உங்கள் நேரம், பயன்பாட்டில் உள்ள பொருட்கள் ஆகியவற்றை இப்படி எந்த நோக்கத்துக்காகப் பயன்படுத்துகிறீர்கள் என்பதில் முழுக் கவனம் இருக்கட்டும்.

● நீங்கள் விரும்பும் வெற்றி பெரியதாக இருக்கலாம். ஆனால், அதை ஒரே மூச்சில் சாதித்துவிட முடியாது. மாபெரும் கடல்கூடப் பல துளி நீர் சேர்ந்து உருவானதுதான் என்பதை மறந்துவிடக் கூடாது. எனவே, எதையும் எப்படிச் செய்வது என்று திட்டமிடுங்கள். ஒவ்வொரு நாளிலும் என்ன செய்யலாம் என்று பிரித்துக்கொள்ளுங்கள்.

நல்ல டிரைவர் இல்லாத ஒரு வாகனம் சரியான பாதையில் போகாது. உங்கள் வாழ்க்கைப் பயணத்தின் டிரைவர், கவனம் சிதறாத உழைப்புதான். அதை மறந்துவிடாதீர்கள்! ●

# வெற்றியாளர் ஆக்கும் ரகசியங்கள்!

- ஒவ்வொரு மனிதரும் தனித்துவமானவர். திறமைசாலியான மற்றவர்களைப் பார்த்து, அவர்களுடன் போட்டி போட நினைக்காதீர்கள். அது உங்களை அந்தத் துறையில் அவருடன் ஒப்பிடும்போது சராசரி மனிதராக ஆக்கிவிடும். உங்களுக்கு எது சிறப்பாக வருகிறது என்பதை உணர்ந்து, அதில் உங்களை மேம்படுத்திக்கொள்ளுங்கள்.
- ஒரு துறையில் வல்லவராக இருந்தாலும், மற்ற விஷயங்களையும் கூடுதலாகக் கற்று வைத்திருங்கள். பல துறைகளிலும் நிபுணத்துவம் பெற்றிருப்பது, எங்கும் கூடுதல் தகுதியாகக் கருதப்படும்.
- உங்கள் கனவுகளையும் லட்சியங்களையும் ஓயாமல் ஊருக்கே சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம். நீங்கள் சாதிக்கும்போது, தானாக எல்லோரும் தெரிந்துகொள்வார்கள்.
- உங்களின் பிரச்னைகள் பலருக்கு வெறும் வம்புப்பேச்சாக மட்டுமே இருக்கும். எனவே, பிரச்னைகளை எல்லோரிடமும் பேசாதீர்கள். அக்கறை காட்டும் குடும்ப உறவுகள், நண்பர்களிடம் மட்டும் பகிர்ந்துகொள்ளுங்கள். அவர்களே உங்களுக்குத் தீர்வு தேட உதவுவார்கள்.
- உங்களின் தோற்றத்தை விட, திறமையும் தகுதியுமே நிறைய வாய்ப்புகளையும் வெற்றிகளையும் தேடித் தரும். தோற்றத்தை மேம்படுத்தும் நேரத்தை, திறமைகளை மேம்படுத்துவதில் செலவிடுங்கள்.
- வாழ்க்கையை ஒவ்வொருவரும் தங்கள் கண்களால் மட்டுமே பார்க்கிறார்கள். மற்றவர்களுக்குத் தவறாகத் தெரிவது, உங்களுக்குச் சரியாகத் தெரியலாம். அவர்கள் 'சரி' என நினைப்பது, உங்களுக்குத் தவறாகத் தெரியலாம். உங்கள் கண்களால் மட்டுமே உங்கள் வாழ்க்கையைப் பாருங்கள்.
- நீங்கள் எந்தத் துறையில் இருந்தாலும், அதில் அவ்வப்போது நிகழும் மாற்றங்களை அறிந்துகொள்ளுங்கள். தொழில்நுட்பம் தினம் தினம் வேகமாக மாறிவருகிறது. கால மாற்றங்களுக்கு ஏற்றபடித் தங்களை மாற்றிக்கொள்ளாதவர்கள், செல்லாக்காசாக ஆகிவிடுவார்கள்.
- கடுமையான வேலைகளுக்கு மத்தியில் மனதை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ள நல்ல நண்பர்கள் உதவுவார்கள். நண்பர்களுடனான கேளிக்கைகளுக்கு வாழ்வில் நேரம் கொடுங்கள். ஆனால், முழுநேரமும் அதிலேயே மூழ்கிவிடாதீர்கள். எந்தப் போதைக்கும் அடிமையாகிவிடவும் கூடாது.
- வாழ்க்கையில் எதிரிகளைவிட ஆபத்தானவர்கள், எதிர்மறையாகப் பேசும் மனிதர்கள். அவர்களிடமிருந்து விலகி இருங்கள். உங்கள் மனத்தில் சந்தேகமும் அவநம்பிக்கையும் விதைத்து, உங்கள் திறமையை அவர்கள் முடக்கிவிடுவார்கள்.
- உங்கள் செயல்களில் நிகழும் தவறுகளுக்கு நீங்களே முதலில் பொறுப்பேற்க வேண்டும். அடுத்தவர்கள் மீது பழி போடும் நேரத்தில், அந்தத் தவறைச் சரிசெய்ய தீர்வு தேடலாம்.
- எந்தச் சங்கடமான சூழலிலும், 'இதுவும் கடந்து போகும்' என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். பிரச்னைகளையும் பின்னடைவுகளையும் கடந்து வருவதற்கு அது ஒன்று மட்டுமே வழி.
- ஒவ்வொரு பிரிவை நினைத்தும் வருந்த வேண்டாம். பெற்றோர், வாழ்க்கைத்துணை, உடன்பிறந்தவர்கள், பிள்ளைகள், பால்ய நண்பர்கள் போன்றவர்களைத் தவிர, காலம் முழுக்கக் கூட வருபவர்கள் என யாருமில்லை. நிலையற்ற உறவுகளில் ஏற்படும் விரிசலை நினைத்து சலனப்பட வேண்டாம். வேலையில் முழுக் கவனத்தையும் செலுத்துங்கள். ●




RAMRAJ
LittleStars®
KIDS DHOTIS & KURTA
LET THE LITTLE ONES SHINE IN THE TRENDING TRADITION.


Steal the Spotlight with Style
Culture India™
TRADITIONAL KURTA
DHOTI • PANCHAKACHAM
RAMRAJ


SHIRT CRAFTED FOR ALL SEASON
EMBRACE THE BREEZY HAPPINESS THIS FESTIVE SEASON WITH WHITE AND COLOUR LINEN PARK FABRIC, SHIRTS & TROUSERS
Available in 50+ Colours as plain and printed.
Crafted for comfort
LINEN PARK®
DHOTIS • SHIRTS • TROUSERS • FABRICS
By
RAMRAJ©
Available @ Ramraj Showrooms & All leading textile shops | Shop online @ www.ramrajcotton.in


கோலமிகு மங்கையர்க்கு...
Kokhila®
பெண்கள் உள்ளாடைகள்
By
RAMRAJ©
Available at Company Showrooms & All leading Textile Shops
shop online@ www.ramrajcotton.in

RAMRAJ காட்டன்

**உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?**

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
போன்:
0421-4304106, 98422 74137

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

ஒரு வருட சந்தா: ~~ரூ.200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ~~ரூ.380~~ ரூ.250 மட்டும்.



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

ஒரு வருட சந்தா: ~~ரூ.200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ~~ரூ.380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**



# வெற்றிக்கான மனநிலை!

ஒருவர் வெற்றியை எட்டிப் பிடிக்கிறாரா, அல்லது தோல்வியில் சுருண்டு போகிறாரா என்பதைத் தீர்மானிப்பதில் அவரின் மனநிலை முக்கியப் பங்கு வகிக்கிறது. அவர் மனத்தில் வளர்ச்சி சிந்தனையும் தன்னம்பிக்கையும் நிரம்பி வழிந்தால், அவர் நிச்சயம் ஜெயிப்பார்.

ஒரு சின்ன பின்னடைவைச் சந்தித்ததுமே விரக்தி ஏற்பட்டு முயற்சியைக் கைவிடும் மனநிலை இருக்கிறதா? அல்லது 'இது என்னால் முடியும்' என்று எந்த செயலைச் செய்யும்போதும் உறுதியாக அந்த முயற்சியில் தொடர்ந்து ஈடுபடும் மனநிலை இருக்கிறதா? எல்லா முடிவுகளையும் சந்தேகப்படும் குழப்பமான மனநிலை இருக்கிறதா? அல்லது, ஒவ்வொரு முடிவையும் நம்பிக்கை மற்றும் துணிச்சலுடன் எடுக்கும் மனநிலை இருக்கிறதா? வெற்றியை இதுவே தீர்மானிக்கும். கனவுகளை இதுவே நிஜமாக்கும். நம்பமுடியாத அதிசயங்களை நிகழ்த்த வைக்கும்.

ஒருபோதும் முயற்சியைக் கைவிடாத மனநிலை இருந்ததால்தான் ஸ்டீவ் ஜாப்ஸ், வால்ட் டிஸ்னி, எலான் மஸ்க், ஜிம் கேரி, நாராயணமூர்த்தி, அப்துல் கலாம் போன்ற அனைவரும் ஜெயித்தார்கள்.

மனத்தின் கட்டுப்பாட்டில் நீங்கள் போய்விட்டால், அது உங்களைச் சந்தேகப்படும். 'இது உங்களால் முடியாது' என்று நம்பவைக்கும். மனத்தை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்தால், 'நம்மால் முடியும்' என்று அதை நம்பவைக்க முடியும். கோடிகளைச் சம்பாதிக்கும் ஒரு தொழிலதிபர், திடீரென இழப்புகளைச் சந்தித்தாலும், திரும்பவும் சம்பாதித்து மீண்டு வந்துவிடுவார். காரணம், ஒருமுறை சம்பாதித்த அவருக்குத் திரும்பவும் சம்பாதிப்பது எப்படி என்று தெரியும். மனத்தை ஒருமுறை வெற்றிக்குப் பழக்கிவிட்டால், திரும்பத் திரும்ப உங்களால் ஜெயிக்க முடியும்.

# வெற்றி சிந்தனை!

ஒரு வேலையில் இருப்பவர், மாலை 6 மணிக்கு சுவிட்ச் போட்டது மாதிரி எழுந்து வீட்டுக்குக் கிளம்பிவிட முடியும். வீட்டுக்குப் போனபிறகு வேலை பற்றிய சிந்தனை இல்லாமலே இருப்பதும் சாத்தியம். ஆனால், தொழிலோ, வியாபாரமோ அப்படி இல்லை. அது வெறுமனே வேலை இல்லை, வாழ்க்கைமுறை. வேலை நேரம், ஓய்வு நேரம் என்று நீங்கள் பிரிக்க முடியாது. எந்த நேரமும் அதைப் பற்றிய சிந்தனை மனத்தில் ஓடிக்கொண்டிருக்கும். திடீரென்று உதிக்கும் ஐடியாக்களைச் செய்ய வேண்டியிருக்கும். அதனால்தான் அவை அதிகபட்ச வெற்றிகளைத் தருகின்றன.



# வெற்றி தரும் பழக்கங்கள்!

- ஒரு செயலில் பின்னடைவு ஏற்படும்போது, 'ஏன் இது பலன் தரவில்லை' என்று யோசிக்காமல், 'என்ன செய்தால் இதில் பலன் கிடைக்கும்' என்று நேர்மறையாக யோசித்து முன்னேறுவார்கள்.
- ஒரு செயலைச் செய்யும்போது செலவுகள், நேரம் மற்றும் உழைப்பை நினைத்துத் தயங்காமல், அதனால் கிடைக்கும் பலன்களை மட்டுமே கவனிப்பார்கள்.
- கூகுள் மேப்பில் வழி தேடினால், எப்போதுமே வேகமாகச் சென்றடைய முடிகிற பாதையைத்தான் காட்டும். அதுபோல, ஒரு செயலில் விரைந்து வெற்றி பெறுவதற்கான வழிகளையே வெற்றியாளர்கள் தேர்வு செய்வார்கள்.
- 'நம்மால் இவ்வளவுதான் முடியும்' என்று தங்கள் எல்லையைக் குறுக்கிக்கொள்ளாமல், பெரிதாகச் சாதிக்கவே திட்டமிடுவார்கள். அதற்கான உதவிகளை எங்கெல்லாம் முடியுமோ, அங்கெல்லாம் தேடிப் பெறுவார்கள்.

# வெற்றி நிச்சயம்!

ஒருவர் தான் மேய்க்கிற பசு மாட்டின் கழுத்தில் கயிறு கட்டி, அதன் மறுமுனையைத் தன் கையில் பிடித்துக்கொண்டு நின்றிருந்தார். புல்வெளியில் பசு மேய்ந்துகொண்டிருந்தது. அந்த வழியாகத் தன் சீடர்களுடன் வந்த ஞானி ஒருவர் அவரிடம் பேச்சுக் கொடுத்தார். "பசுவை நீ பிடித்திருக்கிறாயா? அல்லது பசு உன்னைப் பிடித்து வைத்திருக்கிறதா?" என்று கேட்டார். மாடு மேய்த்தவர் சிரித்தபடி, "இதெல்லாம் ஒரு கேள்வியா? ஊருக்கே விடை தெரியுமே" என்றார். ஞானியின் சீடர்களே சிரித்துவிட்டனர்.

ஞானி சிரிக்கவில்லை. ''திரும்பவும் கேட்கிறேன். யாரோடு யார் கட்டப்பட்டுச் சிறைப்பட்டு இருப்பது என்று புரியவில்லை. நன்றாக யோசித்துப் பதில் சொல்லுங்கள்'' என்றார். "பசு எப்படி என்னைச் சிறை பிடிக்கும். அது என்னைக் கயிற்றால் கட்டி வைக்குமா? நான்தான் அதைக் கட்டி வைத்திருக்கிறேன்" என்று மாடு மேய்ப்பவர் பதில் சொன்னார்.

உடனே ஞானி, பசுவின் கழுத்தில் இருக்கும் கயிற்றை அவிழ்த்துவிட்டார். சுதந்திரம் கிடைத்ததும் பசு ஓடத்தொடங்கியது. மாடு மேய்ப்பவர் பதறிப் போய் அதைத் துரத்திக்கொண்டு ஓடினார். "இந்த மனிதர், பசு தன்னிடம் சிறைப்பட்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார். உண்மையில் அவர்தான் பசுவிடம் சிறைப்பட்டுக் கிடக்கிறார். உலகத்தில் எதுவும் நம்மைப் பற்றுவதில்லை. நாம்தான் எல்லாவற்றையும் பற்றிக் கொண்டு இருக்கிறோம்" என்று தன் சீடர்களுக்கு ஞானி பாடம் சொன்னார்.

மோசமான எண்ணங்களின் சிறையில் சிக்காமல் இருந்தால் வெற்றி நிச்சயம்.



# வெற்றிக்கான 6 கட்டளைகள்!

- படிப்பு, வேலை, தொழில் அல்லது வியாபாரத்தில் நீங்கள் அடைய நினைக்கும் வெற்றிக்காக எதையும் தியாகம் செய்யத் தயாராக இருங்கள். இல்லாவிட்டால், வெற்றியைத் தியாகம் செய்ய வேண்டி வரும்.

- அதிர்ஷ்டத்தால் வெற்றிக்கனி மடியில் வந்துவிழும் என்று நம்பாதீர்கள். கடின உழைப்பு மட்டுமே அதைப் பறித்துத் தரும்.

- பொறுமையை இழந்தால், போரை இழக்கிறீர்கள் என்று அர்த்தம். ஆரம்பத்தில் எதுவுமே நடக்காது, பிறகு நிதானமாக ஏதோ ஒன்று நடக்கும், கடைசியில்தான் வெற்றி கிடைக்கும். முதல்நிலையிலேயே கைவிடுபவர்கள் எப்போதும் ஜெயிப்பதில்லை.

- சராசரியான உழைப்பைக்கூடத் தொடர்ச்சியாகச் செய்துகொண்டே இருந்தால், அது சிறப்பான விளைவுகளைத் தரும். தொடர் உழைப்பு இல்லாமல் வெற்றிகள் வராது.

- ஊக்கம் உங்களை உயர்த்திக்கொண்டே இருக்கும். ஆனால், ஒழுங்கு இருந்தால் மட்டுமே உயரத்தில் நிற்க முடியும். செய்யும் வேலை எதுவாக இருந்தாலும், என்ன பிரச்னைகளை சந்தித்தாலும், நேர்த்தியாக உழைப்பதை நிறுத்தாதீர்கள்.

- உங்களைப் பற்றி தவறாகக் கணித்து யார் யாரோ ஏதேதோ சொல்லக்கூடும். அதையெல்லாம் காதில் வாங்காமல், உங்கள் இலக்கில் கவனமாக இருங்கள்.



# வெற்றியாளர் ஆக்குவது எது?

கூட்டத்தில் இருக்கும் மற்ற எல்லோரையும் தாண்டி ஒருவரை வெற்றியாளராக ஆக்குபவை எவை? இதோ அந்தப் பட்டியல்:

● ஒரு செயலை எப்போது செய்ய வேண்டும், எப்போது அதைச் செய்யாமல் தவிர்க்க வேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். இந்த உலகமே செய்யச் சொன்னாலும், பலன் தராத ஒரு விஷயத்தில் இறங்கமாட்டார்கள். எல்லோரும் தடுத்தாலும், தங்கள் உள்ளுணர்வு சொல்வதைக் கேட்டுக் கடினமான செயல்களைச் சாதிப்பார்கள்.

● தங்களிடம் எதிர்பார்க்கப்படும் உழைப்புக்கு மேலாகவே எப்போதும் கொடுப்பார்கள். 'இது என் வேலை கிடையாது' என்று எதையும் தவிர்க்க மாட்டார்கள். அடுத்தவர்களின் வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கொண்டு செய்வார்கள். எவ்வளவு கஷ்டமான வேலையையும் புன்னகையுடன் செய்ய அவர்களால் முடியும்.

● வெற்றியை அடைய நிறைய பொறுமையும், கடின உழைப்பும், சலிப்பில்லாத முயற்சியும் தேவைப்படும் என்பதை அவர்கள் அறிவார்கள். இடையில் குறுக்கிடும் தோல்விகளில் சோர்ந்து போகமாட்டார்கள். அவற்றிலிருந்து கற்றுக்கொண்டு சரியாகச் செய்வார்கள்.

● ஒவ்வொரு நாளிலும் முந்தைய தினத்தைவிடச் சிறிதளவேனும் முன்னேறி இருக்கிறோமா என்று தங்களுக்குள் கேட்டுக்கொள்வார்கள். அப்படி உழைக்கும்போது குறுக்கிடுவதே அதிர்ஷ்டம் என்று அவர்களுக்குத் தெரியும். சும்மா உட்கார்ந்தபடி, 'மந்திரத்தால் மாங்காய் விழும்' என்று காத்திருக்க மாட்டார்கள்.

● தங்கள் வலிமையை உணர்ந்து, அதைப் பயன்படுத்தித் தங்களால் அடையக்கூடிய இலக்குகளையே அவர்கள் நிர்ணயிப்பார்கள். தங்கள் பலவீனங்களையும் தெரிந்து வைத்திருப்பார்கள். அவை தங்கள் பயணத்தைத் தடுத்துவிடாதபடிப் பார்த்துக்கொள்வார்கள்.

● தங்களின் செயல்களுக்கும், அவற்றின் விளைவுகளுக்கும் தாங்களே பொறுப்பு ஏற்பார்கள். மற்றவர்களின் உதவியை எதிர்பார்த்தாலும், யாரையும் சார்ந்து இருக்கமாட்டார்கள். எந்தத் தவறுக்கும் அவர்கள் மீது பழி போடமாட்டார்கள்.

● தங்களைச் சுற்றிலும் ஏற்படும் மாற்றங்களைத் தெளிவாகக்கவனிப்பார்கள். அந்தமாற்றங்களால்தங்களின் செயல்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்வார்கள். காலச்சூழலுக்கு ஏற்றபடித் தங்களின் வேலை, தொழில் அல்லது வியாபாரத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டால், எல்லோருக்கும் முன்னதாக அதைச் செய்வார்கள். எங்கும் தேங்கிப் போகாமல் புதுப்புது ஐடியாக்களுடன் வருவார்கள்.

● சரியான மனிதர்களிடம் சரியான கேள்விகளைக் கேட்டுத் தங்களுக்கான விஷயங்களைப் பெறுவார்கள். ஒரு பிரச்னையை எதிர்கொள்ளும்போது, ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்க மாட்டார்கள். அதைத் தீர்ப்பதற்கான சிறந்த வழியை அவர்கள் தேடுவார்கள்.

● தங்களுக்குத் திருப்தி ஏற்படாத ஒரு செயலை அவர்கள் தொடர்ந்து செய்ய மாட்டார்கள். தங்களின் திறமைக்கு ஏற்றபடி இல்லாத சின்னச்சின்ன விஷயங்களில் தங்கள் உழைப்பை வீணடிக்க மாட்டார்கள். 'நாம் இருக்க வேண்டிய இடம் எது' என்பது அவர்களுக்குத் தெரியும் என்பதால், அதை நோக்கிய பயணமாகவே அவர்களின் வாழ்க்கை இருக்கும்.

● குறுக்கு வழியில் வெற்றிகளையோ, பணத்தையோ அடைய ஆசைப்பட மாட்டார்கள். வலிமையான கட்டடத்துக்கு உறுதியான அடித்தளம் எப்படி அவசியமோ, அப்படி வெற்றிகரமான ஒரு சாம்ராஜ்ஜியத்தை நிறுவுவதற்கு கடின உழைப்பு முக்கியம் என்பதை அவர்கள் அறிவார்கள். அதை ரசித்துச் செய்வார்கள். ●







# ராம்ராஜ் ஷோரூமிற்கு வருகை தந்த முன்னாள் துணை ஜனாதிபதி!

இந்தியாவின் துணை ஜனாதிபதியாகப் பொறுப்பு வகித்து, சமீபத்தில் தன் பதவிக்காலம் முடிந்து ஓய்வுபெற்றவர் மாண்புமிகு வெங்கய்ய நாயுடு. இந்தியாவின் மிக உயரிய பதவிகளில் இருந்தபோதும், இந்தியப் பாரம்பரிய உடையான வேட்டியையும் வெள்ளை நிற ஷர்ட்டும் அணிந்து வெண்மையின் அடையாளமாக வலம் வந்தவர். வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செல்லும்போதுகூட நம் பாரம்பரிய உடையான வேட்டியை மறக்காதவர்.

பணி ஓய்வுக்குப் பிறகு பெரும்பாலான நாட்கள் சென்னையில் இருக்கும் அவர், தான் அணிவதற்குத் தரமான வேட்டிகள் மற்றும் ஷர்ட்கள் வாங்குவதற்காகத் திடீரென சென்னை வேளச்சேரியில் இருக்கும் ராம்ராஜ் காட்டன் ஷோரூமுக்கு வருகை தந்தார். பாதுகாப்புப் படையினர் புடைசூழ ராம்ராஜ் ஷோரூமுக்கு வருகை தந்த திரு. வெங்கய்ய நாயுடுவைப் பார்த்து, ஷோரூமில் இருந்த வாடிக்கையாளர்கள் ஆச்சர்யம் அடைந்தனர். ஷோரூம் பொறுப்பாளர்கள் அவருக்குப் பூங்கொத்து கொடுத்து, பொன்னாடை அணிவித்து வரவேற்றனர். ராம்ராஜ் ஷோரூமில் இருக்கும் பல்வேறு வெரைட்டி வேட்டிகள் குறித்துப் பணியாளர்கள் அவருக்கு விவரித்தனர். ஷோரூமைச் சுற்றிப் பார்த்து, தங்கள் குடும்பத்துக்கான உடைகளை திரு. வெங்கய்ய நாயுடு தேர்வுசெய்து வாங்கிக்கொண்டு விடைபெற்றார்.



# வெற்றி வழிகள்!

‘கிரிக்கெட் கடவுள்’ என்று அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கர் சொல்லும் வெற்றிக்கான வழிகள்:



1. உங்கள் கனவுகளைத் துரத்துங்கள், அதுவே உங்கள் வாழ்க்கை.
2. எதைச் செய்தாலும் தன்னம்பிக்கையுடன் செய்யுங்கள், அதுவே வெற்றிக்கு அருகில் அழைத்துப் போய் விடும்.
3. நல்ல இயல்புகளுடன் இருங்கள், நல்ல மனிதர்கள் உதவிக்கு வருவார்கள்.
4. கடின உழைப்பைச் செலுத்திப் போட்டி போடுங்கள், போட்டியாளர்களுக்கு மரியாதை கொடுங்கள்.
5. எப்படிப்பட்ட சூழலையும் எதிர்கொள்ள எந்த நேரத்திலும் தயாராக இருங்கள்.
6. ‘என்னால் முடியாது’ என்று தயக்கத்துடன் எதிலிருந்தும் ஒதுங்காதீர்கள்.
7. தெளிவான திட்டங்களுடன் களமிறங்குங்கள், அவற்றைச் சரியாகச் செய்யுங்கள்.
8. சரியான பாதையில் பயணம் செய்யுங்கள், அதன் முடிவில்தான் வெற்றி காத்திருக்கும்.
9. எவருடனும் இணைந்து உழைக்கத் தயாராக இருங்கள், உங்கள் உழைப்பு மதிக்கப்படும்.
10. ‘இந்தத் துறையில் இவரைப் போல சிறந்தவர் இருக்க முடியாது’ என்ற தகுதியைப் பெறுங்கள், வெற்றி கைவசமாகும்.



# ஜெயித்துக் காட்டலாம்!

எவரும் ஜெயித்துக் காட்டுவதற்கு, பிரபல ஹாலிவுட் நடிகர் லியனார்டோ டிகாப்ரியோ சொல்லும் மந்திரங்கள்:

1. உங்களை மாற்றும் எந்தச் சூழலுக்கும் தயாராக இருங்கள், அதுவே வளர்ச்சிக்கு வழி.
2. உங்களின் வங்கிக்கணக்கில் இருப்பு, உங்கள் போன் நம்பரைவிடப் பெரிதாகும் அளவுக்கு உழையுங்கள்.
3. உலகின் 99% மனிதர்கள் செய்யாத ஒரு விஷயத்தை நீங்கள் செய்யும்போதுதான், வெற்றி நெருங்கி வரும்.
4. உங்கள் வெற்றிகளின்போது பாராட்டாதவர்களிடம் கவனமாக இருங்கள்.
5. எந்தத் தோல்வியும் உங்களை ஆக்கிரமித்து முடக்காதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.
6. உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கும் செயல்களைச் செய்யத் தயங்காதீர்கள்.
7. வெற்றி பெறுவதைத் தவிர உங்களுக்கு வேறு எந்த வாய்ப்பும் இல்லை என்பது போல உழையுங்கள்.
8. பிரச்னைகளையும், பிரச்னை தருகிறவர்களையும் புன்னகையுடன் கடந்து செல்லுங்கள்.
9. உங்கள் உழைப்பே உங்களை இந்த உலகத்துக்கு அடையாளம் காட்டும் விசிட்டிங் கார்டு.
10. கடினமான தருணங்களுக்கு நன்றி சொல்லுங்கள், அவையே உங்களை உறுதியானவராக மாற்றின.

# வெற்றி விதிகள்!

எழுத்தாளர், தன்னம்பிக்கைப் பேச்சாளர் கிராண்ட் கார்டன் சொல்லும் வெற்றி விதிகள்:



1. எவ்வளவு நெருக்கடிகள் வந்தாலும், செயல்களில் சோர்வு காட்டாதீர்கள்.
2. பலன்கள், பாதிப்புகளை அலசிப் பார்த்து எந்த முடிவையும் சீக்கிரம் எடுங்கள்.
3. உங்களின் வெற்றிகள் குறித்து மற்றவர்களிடம் நீங்கள்தான் பேச வேண்டும்.
4. அடுத்தவர்களிடமிருந்து பெறுவதைவிட அதிகமாகக் கொடுங்கள்.
5. ‘முடியாது’ என்று சொல்வதைவிட அதிகமாக ‘முடியும்’ என்று சொல்லுங்கள்.
6. சின்னதாகச் செய்யும் ஒரு செயலில் வெற்றி கிடைத்தால், அதைப் பெரிதாக்குங்கள்.
7. சும்மா இருப்பதைவிட ஏதோ ஒன்றைச் செய்வது மேலானது.
8. அடுத்தவர்களிடம் எதிர்பார்ப்பதைவிட அதிகமாக உங்களிடம் எதிர்பாருங்கள்.
9. வளர்ச்சி தரும் எந்த வாய்ப்பையும் கண்ணை மூடிக்கொண்டு ஒப்புக்கொள்ளுங்கள்.
10. தகுதியானவர்களின் ஆலோசனைகளை மட்டுமே பொருட்படுத்துங்கள்.

## சக்சஸ் மந்திரங்கள்!

ஃபேஸ்புக் நிறுவனத்தை உருவாக்கிய மார்க் ஸக்கர்பர்க் சொல்லும் சக்சஸ் மந்திரங்கள் 10 இங்கே:

1. உங்கள் நேரத்தை உருப்படியாகச் செலவிட்டால், அதன் பலனாக வெற்றி கிடைக்கும்.
2. ஆரோக்கியமான விமர்சனங்களைக் காது கொடுத்துக் கேளுங்கள். அவை உங்களை உயர்த்தும்.
3. தவறு செய்தால் வருந்தாதீர்கள், அதிலிருந்து கற்றுக்கொள்ளுங்கள்.
4. யாருடன் இணைந்து உழைத்தால் வளர்ச்சி கிடைக்குமோ, அவர்களுடன் இருங்கள்.
5. எதைச் செய்தாலும், 'இதன் மூலம் என்ன மாற்றத்தை நிகழ்த்த முடியும்' என்று யோசியுங்கள், வெற்றி கிடைக்கும்.
6. உங்களைச் சுற்றி இருப்பவர்களிடமிருந்து நிறைய கற்றுக்கொள்ளுங்கள்.
7. எப்போதும் நல்ல குழுவுடன் இணைந்திருங்கள்.
8. உங்கள் செயல்கள் மூலம் நல்ல அனுபவத்தை எப்போதும் பெற்றிடுங்கள்.
9. எதைச் செய்தாலும் அக்கறையுடன் செய்யுங்கள்.
10. சமூகத்துடன் எப்போதும் இணைந்திருங்கள். அவர்களே உங்களைத் தாங்கிப் பிடிப்பவர்கள்.



## வெல்லும் சொல்!

பிரபல தொழிலதிபரும் வர்ஜின் அட்லான்டிக் விமான நிறுவனத்தின் தலைவருமான ரிச்சர்ட் பிரான்சன் தரும் வெற்றி வழிகள்:

1. தயக்கமே இல்லாமல் செயலில் இறங்குங்கள். அது நிறைய பாடங்களைக் கற்றுக்கொடுக்கும்.
2. எது உங்களைப் பரவசப்படுத்துகிறதோ, அதையே உங்கள் வேலை அல்லது தொழிலாக மாற்றுங்கள். உற்சாகமாக உழைப்பீர்கள்.
3. வாய்ப்புகள் வரும், போகும். வரும்போது தவறவிடாதீர்கள்.
4. சரியான தருணத்துக்காகக் காத்திருக்காதீர்கள். அதை உருவாக்குங்கள்.
5. பெரிய சவால்களை விரும்புங்கள், வளர முடியும்.
6. எதைச் செய்தாலும், அதையே உலகின் உன்னதமான வேலையாகக் கருதுங்கள்.
7. உங்களைப் பார்த்து எல்லோரும் மிரளும் அளவுக்கு வெறித்தனமாக உழையுங்கள்.
8. தெரியாத விஷயத்தையும் செய்து பார்த்து, தோற்று, கற்றுக்கொள்ளுங்கள்.
9. எதிர்காலத் தோல்வியை நினைத்துப் பயந்து, நிகழ்கால நிம்மதியைத் தொலைக்காதீர்கள்.
10. சிறந்ததை மட்டும் உங்களிடம் வைத்திருங்கள், மற்றதை ஒதுக்கிவிடுங்கள்.



## டாப் 10 விதிகள்!

கூகுள் தலைவர் சுந்தர் பிச்சையின் டாப் 10 வெற்றி விதிகள்:

1. 'அடுத்தது என்ன' என்று எப்போதும் தேடிக்கொண்டே இருங்கள்.
2. முடிவெடுக்கும் உரிமையைப் பகிர்ந்து கொடுங்கள், சிறந்த முடிவுகள் கிடைக்கும்.
3. ஐடியாக்கள்தான் செயல்களாக மாறுகின்றன. புதுப்புது ஐடியாக்கள் தேடுங்கள்.
4. ரிஸ்க் எடுக்கத் தயங்காதவர்களுக்கே அதிக வெற்றிகள் கிடைக்கின்றன.
5. எந்தச் சூழ்நிலையிலும், 'இது நமக்கு வளர்ச்சி தரும்' என்றே நினையுங்கள்.
6. பிரச்னைகளைத் தீர்ப்பதுதான் வெற்றிக்கான வாசலைத் திறக்கும்.
7. உங்கள் கனவுகளை மறக்காதீர்கள். அவையே உங்களை உயர்த்தும்.
8. நீங்கள் செய்யும் எதையும் நேசித்து மனப்பூர்வமாகச் செய்யுங்கள்.
9. 'இதுதான் என் எல்லை' என்று வரையறுத்துக்கொள்ளாமல், சக்திக்கு மீறிய உழைப்பைக் கொடுங்கள்.
10. ஒவ்வொரு நாளிலும் உங்கள் வளர்ச்சிக்காக ஏதேனும் ஒன்றைச் செய்யுங்கள்.






# கூடாரத்தில் வாழ்ந்தவர்...
# கோடிகளில் சம்பாதிக்கிறார்!

தங்குவதற்கு இடமில்லாமல் ஒரு மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த கூடாரத்துக்குள் வாழ்ந்த ஒரு சிறுவன், பிழைப்புக்காக பானிபூரி கடையில் வேலை பார்த்த இளைஞன், இன்று நான்கு கோடி ரூபாய் சம்பாதிக்கும் வாய்ப்பு பெற்றிருக்கிறார். எதுவும் லாட்டரியில் அவருக்குப் பரிசு விழவில்லை. சூதாட்டம் இல்லை. சினிமாவில் நடப்பது போல ஒரே பாடலில் பணக்காரர் ஆகிவிடவில்லை. வாழ்க்கையில் தன் லட்சியத்தைக் கைவிடாமல் அதற்காக உழைத்தால் வெற்றி பெறலாம் என்பதற்கு உதாரணமாகி இருக்கிறார்.

அவர், யஷஸ்வி ஜெய்ஸ்வால். 21 வயதுதான் ஆகிறது. அதற்குள் கிரிக்கெட்டின் அடுத்த டெண்டுல்கர், அடுத்த விராட் கோலி என்றெல்லாம் புகழப்படுகிறார். இந்த ஆண்டு ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்கு ராஜஸ்தான் ராயல்ஸ் அணி இவரை ரூ.4 கோடிக்கு ஏலம் எடுத்திருக்கிறது. ஐ.பி.எல் கிரிக்கெட்டில் அதிவேக அரை சதம், இந்திய அணிக்காக அறிமுகமான முதல் டெஸ்ட் போட்டியிலேயே சதம் அடித்தது என்று வரிசையாக சாதனைகள் செய்துவருகிறார்.

இப்போது மும்பையில் வசதியாக இருக்கும் யஷஸ்வியின் குழந்தைப் பருவம் அப்படி இருக்கவில்லை. உத்தரப் பிரதேசத்தின் வாரணாசி அருகே உள்ள படோகி என்ற சிறு நகரத்தில் பிறந்தவர் யஷஸ்வி. அப்பா பூபேந்திரா பெயின்ட் வியாபாரம் செய்கிறார். வரும் வருமானம் நான்கு குழந்தைகள் சாப்பிட மட்டுமே போதுமானது என்ற சூழல்.

எட்டு வயதிலேயே யஷஸ்விக்கு கிரிக்கெட்டில் ஆர்வம் வந்தது. அதிகாலையிலேயே விளையாடப் போவார். விடுமுறை நாட்களில் பந்து கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து இருள் சூழும்வரை ஆடுவார். 13 வயதில் அவரை மும்பைக்கு அழைத்து வந்து, ஓர் உறவினர் வீட்டில் விட்டார்கள். அந்த உறவினர் வீடு சிறியது. அவர்களுக்கே இடமில்லாத சூழ்நிலை. அந்த உறவினர் ஒரு பால் கடையில் யஷஸ்வியைக் கூட்டிப்போய்ச் சேர்த்தார். இரவில் அங்கே தங்கியபடி வேலை பார்த்துக்கொண்டே கிரிக்கெட் பயிற்சிக்குச் செல்லலாம் என ஏற்பாடு. ஆனால், யஷஸ்வி அதிக நேரம் கிரிக்கெட் பயிற்சிக்குச் செல்வது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் துரத்திவிட்டனர்.



மும்பை ஆசாத் மைதானத்தில் நிறைய பேர் கூடாரம் அமைத்துத் தங்கியிருந்தனர். அவர்களில் சிலர் கிரிக்கெட் விளையாடுபவர்கள். 'இந்தக் கூடாரங்களில் ஒன்றில் தங்குவதற்கு இடம் கிடைத்தால், நாள் முழுக்க கிரிக்கெட் பயிற்சி எடுக்கலாமே' என அவருக்குத் தோன்றியது. கிரிக்கெட் கிளப்பின் அனுமதி இல்லாமல் அங்கு தங்க முடியாது. அன்று அந்த மைதானத்தில் ஒரு கிரிக்கெட் போட்டி நடந்தது. யஷஸ்வியின் நல்ல நேரம், ஒரு டீமில் பேட்டிங் செய்ய ஆள் குறைந்தது. "நான் நன்றாக பேட்டிங் செய்வேன். எனக்கு வாய்ப்பு கொடுங்கள்" என்று போராடி யஷஸ்வி அணியில் இடம் பிடித்தார். அன்று நன்கு ஆடியதால், ஒரு கூடாரத்தில் தங்கிக்கொள்ள அனுமதி கிடைத்தது.

மின்சாரம் கிடையாது, தண்ணீர் கிடையாது, அவசரத்துக்கு ஒதுங்க கழிப்பறை கிடையாது. என்றாலும், யார் தொந்தரவும் இல்லாமல் இரவில் தூங்குவதற்கான இடமாக அது இருந்தது. அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அதுதான் அவரது வீடாக இருந்தது. தங்கும் இடப் பிரச்னை தீர்ந்தாலும், சாப்பாட்டுப் பிரச்னை தீரவில்லை.

மைதானத்துக்கு வெளியில் ஒரு பானிபூரி கடையில் வேலைக்குச் சேர்ந்தார் அவர். பகல் முழுக்கப் பயிற்சியும் விளையாட்டும்! இரவில் பானிபூரி விற்பார். மைதானத்தில் அவருடன் விளையாடியவர்கள் அந்தக் கடைக்கு வரும்போது சங்கடமாக இருக்கும். "காலையில் கிரிக்கெட் போட்டியில் 100 ரன்கள் எடுத்திருப்பேன். ஆனாலும், அன்று மாலை போய் பானிபூரி விற்றால்தான் இரவு நான் சாப்பிட முடியும். பெரிய போட்டிகள் நடக்கும்போது, எல்லைக்கோட்டுக்கு வெளியில் நின்று பந்தைச் சேகரித்துக் கொடுக்கும் வேலையும் செய்திருக்கிறேன். எதையும் செய்யக் கூச்சப்பட்டதில்லை. என் கவனம் விளையாட்டிலிருந்து விலகாமல் பார்த்துக்கொண்டேன்" என்கிறார் யஷஸ்வி.

கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் இப்படியே போராட்ட வாழ்க்கை நடத்திய யஷஸ்வி, ஜ்வாலா சிங் என்ற நல்ல மனிதரின் கண்ணில் பட்டார். ஜ்வாலா சிங் ஒரு கிரிக்கெட் கோச். மற்ற எல்லோரும் விளையாடத் திணறிய ஒரு போட்டியில் யஷஸ்வி சர்வசாதாரணமாக ஆடியதைப் பார்த்தவர், 'இவன் ஒரு கிரிக்கெட் ஜீனியஸ்' என்று கண்டுபிடித்தார். யஷஸ்வியிடம் பேசினார். அவரது பின்னணியை அறிந்தவர், அன்றே தன் வீட்டுக்குக் கூட்டிச் சென்றார். அன்றுமுதல் அவருக்கு வளர்ப்புத் தந்தை ஆனார் ஜ்வாலா சிங்.

யஷஸ்வி அதன்பின் சாதனைகள் புரிய ஆரம்பித்தார். 2019–ல் மும்பை கிரிக்கெட் அணிக்காக ஆடுவதற்குத் தேர்வு செய்யப்பட்டார். ஆடிய முதல் போட்டியிலேயே 203 ரன்கள் எடுத்தார். 'தேசிய அளவிலான 50 ஓவர் போட்டிகளில் மிக இளம் வயதில் இரட்டை சதம் அடித்தவர்' என்ற உலக சாதனையைப் புரிந்தார். அது அவரை உடனே 19 வயதுக்கு உட்பட்டோருக்கான இந்திய அணியில் இடம் பிடிக்க வைத்தது. அதைத் தொடர்ந்து ஐ.பி.எல் ஏலத்திலும் ரூ.4 கோடிக்கு அவர் கடும் போட்டிக்கு இடையில் ராஜஸ்தான் அணியால் ஏலம் எடுக்கப்பட்டார்.

"எதுவும் எனக்குச் சுலபமாகக் கிடைத்துவிடவில்லை. கடும் உழைப்புக்கும் போராட்டத்துக்குப் பிறகே நான் ஒவ்வொரு படியிலும் ஏறினேன். இப்போது பலனும் பணமும் கிடைத்திருக்கின்றன. இதையெல்லாம்விட, நினைத்ததைச் சாதித்தோம் என்ற திருப்தி கிடைக்கிறது. அதுதான் பெரிய பலன்" என்கிறார் யஷஸ்வி. முன்னாள் பாகிஸ்தான் வீரர் ஷோயிப் அக்தர். "நாம் செய்யும் எதையும் உன்னதமாகச் செய்தால், பணம் நம் பின்னால் ஓடிவரும் என்பதற்கு நம் கண் முன்னே நடமாடும் உதாரணம் யஷஸ்வி" என்கிறார். ●

வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 8 இதழ் 5

நவம்பர் 2023

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜ் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
email: contacttharu@gmail.com

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.

Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

ஒரு தொழிற்சாலையின் டெக்னிக்கல் பிரிவில் இளைஞன் ஒருவன் இருந்தான். அந்தப் பிரிவின் தலைவராக இருந்த வயதான மனிதர், அவனுக்கு எல்லா வேலைகளையும் கற்றுக்கொடுத்தார். அவனும் ஆர்வத்துடன் கற்றுக்கொண்டு உழைத்தான். நல்ல திறமைசாலி என்று சக ஊழியர்கள் மத்தியில் பெயர் எடுத்தான்.

சில ஆண்டுகளில் தலைவர் ஓய்வுபெற்றார். அவன் அதே அர்ப்பணிப்புடனும் விடாமுயற்சியுடனும் தன் வேலையைத் தொடர்ந்தான். ஒரு நாள் கடைவீதியில் தன் வழிகாட்டியான பழைய தலைவரைச் சந்தித்தான். அவன் விரக்தியில் இருப்பதைக் கண்ட தலைவர், காரணம் கேட்டார். "இத்தனை ஆண்டுகளாக நான் கடினமாக உழைக்கிறேன். ஆனால், என் அளவுக்கு அனுபவமோ திறமையோ இல்லாத பலரும் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள். எனக்கு எதுவுமே முன்னேற்றம் கிடைக்கவில்லை" என்று வருந்தினான்.

அந்த முன்னாள் தலைவர் யோசித்தார். "நீ தொழிற்சாலையில் தவிர்க்க முடியாதவன் என்பதை நிரூபித்தாயா?" என்று கேட்டார். "எனக்கு அது தெரியும். மற்றவர்களுக்கு எப்படி நிரூபிப்பது?" என்று கேட்டான் அவன். "ஏதாவது காரணம் சொல்லி ஒரு வாரம் விடுமுறை எடு" என்றார் முதியவர்.

அவனுக்குக் காரணம் புரியாவிட்டாலும், அவர் சொன்னபடி செய்தான். அவன் விடுமுறையில் போன அந்த நேரத்தில், முக்கியமான இயந்திரம் பழுதடைய, வேலை தேங்கி நின்றது. யார் யாரோ போராடி ஒன்றும் நடக்கவில்லை. அதைச் சரிசெய்ய அவனுக்கு மட்டுமே தெரியும் என்பதால், வீடு தேடி வந்து அவனை அழைத்துப் போனார்கள். அவன் கைவைத்ததும் அரை மணி நேரத்தில் நிலைமை சீரானது. மேனேஜர் அவனை மதிப்புடன் பார்த்தார். அடுத்த மாதமே அவனுக்குப் பதவி உயர்வு கிடைத்தது.

உடனே முதியவரைத் தேடிவந்து நன்றி சொன்னான். அந்த நேரத்தில் அவர் ஏதோ அறிவுரை சொல்ல வர, அதைக் காதில் வாங்காமலே திரும்பி வந்தான். அதன்பின் அந்த இளைஞன் தனக்குப் பதவி உயர்வோ, சம்பள உயர்வோ தேவைப்படும்போதெல்லாம் விடுப்பு எடுத்தான். அவன் விடுமுறையில் இருக்கும்போது ஏதோ பிரச்னை வரும், எல்லோரும் தடுமாறுவார்கள், அவன் வந்து நிலைமையைச் சீர் செய்வான். இது கிட்டத்தட்ட ஒரு விளையாட்டு போலவே அவனுக்கு ஆகிவிட்டது.

இப்படியே பல மாதங்கள் தொடர்ந்தது. ஒரு நாள் அந்த இளைஞன் விடுப்பு முடிந்து வேலைக்கு வந்தபோது, வாசலிலேயே அவனைத் தடுத்தார்கள். அவனை வேலையிலிருந்து நீக்கிவிட்டதாக மேனேஜர் சொன்னார்.

# தவிர்க்க முடியாதவரா நீங்கள்?



அவன் அதிர்ச்சியுடன், தனக்கு வழிகாட்டிய முன்னாள் தலைவரிடம் போனான். விஷயத்தைச் சொன்னான்.

‘‘நான் சொன்னதில் பாதியை நீ கேட்டாய், மீதி அறிவுரையைக் காதில் வாங்கவே இல்லை. எப்போதும் எரிந்துகொண்டிருக்கும் மின்விளக்கை யாரும் கவனிப்பதில்லை, அது அணைந்து போய் இருட்டில் தடுமாறும்போதுதான் அதன் அவசியத்தைப் புரிந்துகொள்கிறார்கள். உன்னை விடுப்பு எடுக்கச் சொன்னது அதற்காகத்தான். அதன்பின் உனக்கு உயர்வு கிடைத்தது. ஆனால், இரண்டாவது பாதி அறிவுரை அதைவிட முக்கியமானது. ஒரு விளக்கு அடிக்கடி அணைந்தால், விரைவிலேயே அது தனது நம்பகத்தன்மையை இழந்துவிடும். அதைத் தூக்கிப் போட்டுவிட்டு வேறு விளக்கு வாங்கிக்கொள்வார்கள். இப்போது உனக்கு அதுதான் நடந்திருக்கிறது” என்றார் முதியவர்.

ஒரு வேலையில் தவிர்க்க முடியாதவராக இருப்பது நல்லது. ஆனால், அதை வைத்து ஆதாயம் தேட முயல்வது, வெற்றியைத் தேடித் தராது. வெற்றியை அடைய இன்னும் சில பழக்கங்களும் தேவை. அவை:

● உங்கள் துறை சார்ந்து நிறைய படியுங்கள், அனுபவம் கிடைக்கும், உத்வேகம் கிடைக்கும். பிறரின் வெற்றி, தோல்விகளிலிருந்து கற்றுக்கொள்ள முடியும். எவ்வளவு பிஸியான வேலைகள் இருந்தபோதும் முன்னாள் அமெரிக்க அதிபர் ஒபாமா, மைக்ரோசாஃப்ட் நிறுவனர் பில் கேட்ஸ் போன்றவர்கள் தினமும் ஒரு மணி நேரமாவது படிக்கத் தவறுவதில்லை.

● பள்ளி மாணவன் போல எப்போதும் கற்றுக்கொள்ளத் தயாரான மனநிலையுடன் இருங்கள். கற்றுக்கொண்ட விஷயங்கள் வெறுமனே மூளையில் பதிந்திருந்தால் அர்த்தமில்லை. அவற்றை உங்கள் வேலை அல்லது தொழிலில் பயன்படுத்திப் பாருங்கள்.

● பதற்றம், கோபம், வலி, மன அழுத்தம் போன்ற எதிர்மறை உணர்வுகள் உங்கள் மனத்தில் குடியேறாமல் பார்த்துக்கொள்ளுங்கள். சலனமில்லாத மனமே, தன்னைச் சுற்றிலும் நடப்பதைக் கவனிக்கும். அவற்றிலிருந்து கற்றுக்கொள்ளும்.


● ஒரு நேரத்தில் ஒரு வேலையில் மட்டும் முழுக் கவனம் செலுத்துங்கள். அப்போதுதான் அதை வேகமாகவும் நேர்த்தியாகவும் முடிக்க முடியும். வேலைக்கு நடுவில் பொழுதுபோக்குவது, வேறொரு சின்ன வேலையைச் செய்வது, மெசேஜ்களுக்கு பதில் தருவது என்று இருந்தால் கவனம் சிதறும்.

● ஒரு நிறுவனத்தை வளர்த்துப் பெரிதாக்கும் வரை ஞாயிற்றுக்கிழமைகளில் கூட ஓய்வெடுக்காமல் வருடக்கணக்கில் உழைப்பவர்கள் உண்டு. டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தன் பள்ளிக்காலத்தில் காலை 6 மணிக்கு டென்னிஸ் பயிற்சி செய்ய ஆரம்பித்தார். டென்னிஸ் விளையாட்டிலிருந்து ஓய்வு பெறும்வரை அந்தப் பழக்கத்தை மாற்றவில்லை. கடின உழைப்பும் தொடர் பயிற்சியும் உங்களைச் சிகரத்தில் நிலைநிறுத்தும்.

● எவ்வளவு மோசமான தோல்வி ஏற்பட்டாலும், எதுவுமே நடக்காதது போல அடுத்த நாளே முதலிலிருந்து உழைக்கும் மன உறுதியைப் பெறுங்கள். மீண்டு வரத் தெரிந்தவர்களுக்கே இந்த உலகம் வாய்ப்புகளை வழங்குகிறது.

● செய்யும் வேலை எதுவோ, அதில் 100% நிபுணத்துவம் பெறுங்கள், 200% அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்யுங்கள், 300% ஈடுபாடு காட்டுங்கள். உங்கள் வெற்றியை எந்தச் சக்தியும் தடுக்க முடியாது. ●

# வாசகர் கடிதங்கள்!



‘வெண்மை’ மேன்மக்கள் சிறப்பிதழ் எங்களுக்கு உத்வேகம் கொடுத்தது. ராம்ராஜ் காட்டன் நிறுவனர் தன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த முதிய ஆட்டோ டிரைவரின் உழைப்பும் தொழில் பக்தியும் சிலிர்க்க வைத்தது. மேன்மை என்பது பணத்திலும் அந்தஸ்திலும் இல்லை. நடத்தையில்தான் இருக்கிறது.

*– எஸ்.நெல்லையப்பன்,*
*திருநெல்வேலி.*

மேன்மையான மனிதர்களாக நம்மை மாற்றுவதற்கான வழிகளைக் காட்டிய ‘வெண்மை’ அக்டோபர் மாத இதழ் சிறப்பு. தமிழ் மக்களின் பண்பைச் செதுக்கும் அற்புதமான சமூகப்பணியை ராம்ராஜ் காட்டன் செய்துவருகிறது. உங்கள் பணி சிறக்கட்டும்!

*– கே.சீனிவாசன், மயிலாப்பூர்,*
*சென்னை-4.*

ஒரு துணுக்குச் செய்தியில்கூட அருமையான வழிகாட்டல், எளிய மனிதர்களின் வாழ்வில் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்களைச் சொல்லி நாம் வாழ வேண்டிய வழியை நினைவூட்டல், ‘வெண்மை’ மேன்மக்கள் சிறப்பிதழ் பாதுகாக்க வேண்டிய புத்தகம்.

*– தேவ.ஞானதிரவியம்,*
*காந்திபுரம், கோவை.*

- காலையில் எழுந்ததும் உடற்பயிற்சி, படிப்பு, யோகா அல்லது தியானம் என்று வழக்கமான சில பழக்கங்களைப் பின்பற்றுங்கள். மாலையிலும் இதுபோலத் தினசரி வழக்கங்கள் இருக்கட்டும். 'எல்லாம் சீராகப் போய்க்கொண்டிருக்கின்றன' என்ற உணர்வை ஏற்படுத்த இது உதவும்.
- காலையில் உங்களின் சக்தி உச்சத்தில் இருக்கும்போது, அன்றைய நாளின் மிகக் கடினமான வேலையை எடுத்துச் செய்யுங்கள். அப்போதுதான் அடுத்தடுத்த வேலைகள் சுலபமாகவும் தெரியும், அவற்றைச் சீக்கிரம் முடிக்கவும் முடியும்.
- இரவில் தூங்கப் போகும்முன், அடுத்த நாளுக்கான வேலைகளைத் திட்டமிடுங்கள். மனதளவில் அந்த வேலைகளுக்கு நீங்கள் தயாராக இது உதவும். அந்த வேலைகளுக்கு என்னென்ன தேவைப்படும் என்பதை உணர்ந்து ரெடி செய்யவும் வசதியாக இருக்கும்.
- உங்கள் படிப்பு, வேலை, தொழில், வியாபாரம், வாழ்க்கை என்று எதுவாக இருந்தாலும், அதில் உங்களுக்குச் சில இலக்குகள் இருக்கும். அந்த இலக்குகளைப் பொறுத்து உங்கள் வேலைகளுக்கு முன்னுரிமை கொடுப்பீர்கள். அந்த வேலைகளுடன் இரண்டறக் கலந்துவிடுங்கள். உங்கள் உணர்வில் அவை நீக்கமற நிறைந்திருக்க வேண்டும்.

# வெற்றிக்கான தினசரி பழக்கங்கள்!



- சாலையோரத்தில் மைல்கல் இருப்பது, நாம் எவ்வளவு தூரம் பயணத்தில் கடந்திருக்கிறோம், அடைய வேண்டிய இடத்துக்கு எவ்வளவு நெருக்கமாக வந்திருக்கிறோம் என்பதை உணர்த்தவே! இதேபோல் உங்கள் பயணத்தில் எவ்வளவு தூரம் கடந்தோம், எப்படிச் செல்கிறோம் என்பதை அவ்வப்போது கவனியுங்கள்.
- ஒரு வேலையில் எவ்வளவு கவனம் செலுத்துகிறோம், என்ன மாதிரி உழைப்பைப் போடுகிறோம், அது எவ்வளவு நேரத்தில் முடிகிறது, அதில் என்ன பலன் கிடைத்தது... இந்த நான்கு விஷயங்களையும் அலசுவது முக்கியம். முக்கியமான வேலைகளைச் செய்யும்போது இதைக் கண்காணித்தால், பலனை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு வேலைக்குமான உழைப்பைக் கொடுக்கலாம்.
- எந்த ஒரு செயலையும் செய்யும்போது, இதில் நாம் இறுதியாக இப்படிப்பட்ட பலனை எதிர்பார்க்கிறோம் என்ற எண்ணத்துடன் அதை ஆரம்பிக்க வேண்டும். அது நம்மை உற்சாகமாக உழைக்க வைக்கும்.
- நம் உணர்வுகளுடன் விளையாடி நம்மைத் திசைதிருப்ப ஏராளமான விஷயங்கள் இருக்கின்றன, சில மனிதர்களும் அதைச் செய்யக்கூடும். நீங்கள் கேள்விப்படுவதை நம்பவே நம்பாதீர்கள். கண்ணால் பார்ப்பதைப் பாதி நம்பலாம். விசாரித்து முழுமையாக அறிந்த பிறகே எதையும் நம்புங்கள்.
- ஏதோ ஒன்று நடந்து முடிந்த பிறகு, அதைச் சரி செய்வதற்காகவோ, அல்லது அதைப் போல இன்னொரு விஷயத்தைச் செய்வதற்காகவோ நிறைய பேர் முயற்சி செய்வார்கள். அப்படிப்பட்ட வேலைகள் பலன் தருவதில்லை. ஒரு விஷயம் நடப்பதற்கு முன்பாகவே அதைக் கணித்து, அதற்கு ஏற்றபடி தயாராக இருப்பதே வெற்றிக்கு வழி.
- கற்றல் என்பது பள்ளி, கல்லூரியுடன் முடிகிற விஷயம் இல்லை. அது வாழ்க்கை முழுக்கத் தொடரும் செயல். ஒவ்வொரு நாளிலும் ஏதோ ஒன்றைக் கொஞ்சமேனும் கற்றுக்கொள்ளுங்கள். அது உங்களை இன்றைய வாழ்க்கைச்சூழலுடனும், தொழில் சூழலுடனும் அப்டேட்டாக வைத்திருக்கும். ●



# பாதுகாப்பா கொண்டாடுங்க தீபாவளி!

- குழந்தைகளின் வயதுக்குப் பொருத்தமான பட்டாசுகளை வாங்குங்கள். பெரியவர்களுக்கான பட்டாசுகளை வாங்கித் தராதீர்கள். குழந்தைகள் வெடிக்கும்போது அருகில் இருந்து கண்காணிப்பது நல்லது.
- தரமற்ற போலியான பட்டாசுகளைத் தவிர்த்துவிடுங்கள். அவை சரியாக வெடிக்காமல் உங்கள் பணத்துக்கு வேட்டு வைக்கும்; அல்லது எதிர்பாராத நேரத்தில் வெடித்து விபத்தில் சிக்க வைக்கும்.
- அதிக சத்தம் எழுப்பும் பட்டாசுகளைத் தவிர்த்துவிடுங்கள். அவை உங்கள் செவிகளுக்கும் ஆபத்து. உங்கள் வீட்டிலும், பக்கத்து வீடுகளிலும் இருக்கும் முதியோர்கள், உடல்நலமில்லாதவர்கள், குழந்தைகளுக்கு மிகுந்த அவஸ்தையைத் தரும்.
- ஒவ்வொரு தீபாவளிக்கும் புதுப்புது ரகங்களில் பட்டாசுகள் அறிமுகம் ஆகின்றன. அவற்றை எப்படி வெடிப்பது என்று அட்டைப் பெட்டிகளின் மேலே குறிப்பு இருக்கும். அதைக் கவனமாகப் படித்து பின்பற்றுங்கள். இல்லாவிட்டால் ஆபத்து.
- ரொம்ப லூசான ஆடைகளை அணிந்துகொண்டு பட்டாசு கொளுத்த வேண்டாம். நைலான், பட்டு ஆடைகள், காற்றில் பறக்கும் ஆடைகள் வேண்டாம். காட்டன் உடைகளே பாதுகாப்பு.
- தொழிற்சாலைகள், குடிசைப் பகுதிகள், பெட்ரோல் பங்க், மருத்துவமனை அருகே பட்டாசு வெடிக்கக்கூடாது. நெரிசலான மார்க்கெட் பகுதிகள், வாகனங்கள் நிறைய வரும் ரோடுகள் ஆகிய இடங்களையும் தவிர்க்கவும்.
- பட்டாசு அல்லது மத்தாப்புகளைக் கொளுத்துவதற்கு நீண்ட ஊதுபத்தி அல்லது நீண்ட கம்பி மத்தாப்புகளைப் பயன்படுத்துவதே சிறந்தது. வெடிகளைப் பற்ற வைக்கும்போது தலையைக் கீழே குனிந்து முகத்தை அருகில் கொண்டு சென்று ஒருபோதும் வெடிக்கக்கூடாது.
- ராக்கெட் வெடியைச் சிலர் பாட்டிலில் வைத்து வெடிப்பார்கள். அது தவறு. தவறுதலாக பாட்டில் வெடித்துச் சிதறினால் நமக்குப் பாதிப்பு வரலாம்.
- காலில் செருப்பு அல்லது ஷூ அணிந்துகொண்டு வெடிக்க வேண்டும். யாராவது கொளுத்திவிட்டு அரைகுறையாகப் போட்ட பட்டாசுகள் காலைப் பதம் பார்த்துவிடும் அபாயம் உள்ளது.
- எந்த வெடியையும் கையில் வைத்துக் கொளுத்தக்கூடாது.
- சரங்கள் தவிர மற்ற பட்டாசுகளை ஒரு நேரத்தில் ஒன்றை மட்டுமே கொளுத்த வேண்டும். சாகசம் செய்வதாக நினைத்துக்கொண்டு, வரிசையாகப் பல பட்டாசுகளைக் கொளுத்தினால் ஆபத்தை விலை கொடுத்து வாங்குவதாக அர்த்தம்.
- புஸ்வாணம் கொளுத்தும் போது, சம தரையில் வைத்து பக்கவாட்டில் நின்று கொளுத்துங்கள். பூந்தொட்டி, சங்கு சக்கரம், ராக்கெட் போன்ற பட்டாசுகளை கையில் வைத்துக் கொள்ளாதீர்கள்.
- புஸ்வாணம் எரியவில்லை என்றால், கையில் எடுத்துப் பார்க்கக்கூடாது. பத்து நிமிடங்கள் வரை பொறுமையாகக் காத்திருந்து, தண்ணீரில் அந்தப் பட்டாசை நன்றாக மூழ்க வைத்து, செயலிழக்கச் செய்ய வேண்டும்.
- சிலர் பட்டாசுகளையும் மத்தாப்புகளையும் நாய்கள் மற்றும் பூனைகள் மீது எறிந்து விளையாடுவார்கள். இது தவறு. எல்லா விலங்குகளுமே பட்டாசுகளுக்கு பயப்படும். அவற்றைப் பயமுறுத்தினால், அவை பயத்தில் கடித்து வைக்கலாம்.
- ஆஸ்துமா போன்ற சுவாசப் பிரச்னை உள்ளவர்கள், பட்டாசு வெடிக்கும் பகுதிகளைத் தவிர்ப்பது நல்லது. தவிர்க்க இயலாத சூழலில் மாஸ்க் அணிந்துகொண்டு செல்லுங்கள்.
- தீப்புண், காயங்கள் போன்றவற்றுக்கான மருந்துகளுடன், வீட்டில் முதலுதவி சாதனங்கள் கைவசம் இருக்கட்டும்.

## வெற்றிக்கும் என்ன கொடுப்பது?

- மற்றவர்கள் பலரும் ‘முடியாது’ என்று ஒதுங்கிய பிறகும், வெற்றியாளர்கள் தொடர்ந்து உழைத்துக்கொண்டே இருப்பார்கள். அந்தச் செயலில் கிடைக்கும் பலன் என்ன என்பது அவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்திருக்கும்.
- வெற்றியை அடைவதற்கு ஒரு விலை கொடுக்க வேண்டும் என்பதை அவர்கள் அறிவார்கள். தங்கள் தூக்கத்தை, பொழுதுபோக்கை, நேரத்தைத் தியாகம் செய்து அதை அடைவார்கள்.
- அவர்களிடம் சரியான இலக்கு இருக்கும், அதை அடைவதற்குத் தெளிவான திட்டமும் இருக்கும். தூக்கத்தில் எழுப்பிக் கேட்டாலும் அதைச் சொல்வார்கள்.
- மனிதர்களைப் புரிந்துகொள்வதிலும், அவர்களை ஊக்கப்படுத்தி வேலை வாங்குவதிலும் திறமைசாலிகளாக இருப்பார்கள்.
- பணம், கௌரவம், அந்தஸ்து, வசதிகள் ஆகிய எதுவுமே அவர்களை ஈர்க்காது. வெற்றியை அடைவதற்காக எதையும் இழக்கத் தயாராக இருப்பார்கள்.





## வெற்றியாளர்கள் இப்படி இருப்பார்கள்!

- தன்னை உணரும் திறன் அவர்களுக்கு இருக்கும். தான் யார், தன் இலக்கு என்ன, பலம் என்ன, பலவீனம் என்ன, தன் பொறுப்பு என்ன என்று எல்லாவற்றையும் உணர்ந்திருப்பார்கள்.
- தங்கள் உணர்வுகளையும் நேரத்தையும் தங்கள் கட்டுக்குள் வைத்திருப்பார்கள். எந்தச் சூழலிலும் எப்படித் தங்களை வெளிப்படுத்த வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியும். அதேபோல, நாளை என்ன செய்வது, அடுத்த வாரம் என்ன செய்வது, அடுத்த மாதம் என்ன வேலை என்று நேரத்தைத் திட்டமிடுவார்கள்.
- அவர்களிடம் சோம்பல் இருக்காது. ஒரு வேலையைத் திட்டமிடுவதற்கு முன்பாகவே அதைச் செய்யத் தயாராகி விடுவார்கள்.
- தங்கள் இலக்கு என்ன என்பதில் தெளிவாக இருப்பார்கள். அதை அடைவதற்கான வழியையும் அவர்கள் தீர்மானிப்பார்கள். மாற்று வழிகள், தங்கள் தகுதிக்கும் குறைவான விஷயங்களை அடைவதற்கான வாய்ப்புகள் ஆகியவற்றை அவர்கள் தவிர்த்துவிடுவார்கள்.
- ‘இதைச் செய்ய வேண்டும்’ என்று சொல்வதற்கு முன்பாகவே அவர்கள் செயலில் இறங்கிவிடுவார்கள். அடுத்தவர்களின் அனுபவங்களிலிருந்து அவர்கள் எளிதில் கற்றுக்கொள்வார்கள்.
- ஒரு செயலைத் தரமாகவும், இன்னொரு செயலை சுமாராகவும் செய்ய அவர்களால் முடியாது. எல்லாவற்றிலும் ஒழுங்கு இருக்கும். எப்போதும் எதையும் முதல்தரமாகச் செய்வார்கள்.



## மன உறுதியே மந்திரம்!

பள்ளியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டபோது, வகுப்பறையில் உட்கார்ந்திருந்து மிக மோசமாகத் தீக்காயம் பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான் ஒரு சிறுவன். “கால்களில் ஆரம்பித்து தொடை வரை உடலின் கீழ்ப்பாதி முழுக்க, தீயில் எரிந்திருக்கிறது. இவன் உயிர் பிழைப்பது கடினம். அப்படியே உயிர் பிழைத்தாலும், இவன் வாழ்நாள் முழுக்க படுக்கையில்தான் கிடக்க வேண்டும்” என்று மருத்துவர் அவன் அம்மாவிடம் சொன்னார்.

மருத்துவர் சொன்னது சிறுவன் காதுகளிலும் விழுந்தது. ஆனால், அந்தத் துணிச்சல்காரச் சிறுவன் சாக விரும்பவில்லை. அவன் வாழ்வதற்கு ஆசைப்பட்டான். அந்த வாழ்விலும் படுக்கையில் கிடக்க அவன் தயாராக இல்லை. தன் கால்களுக்குப் பயிற்சி கொடுத்து அவன் மெல்ல மெல்ல நடக்க ஆரம்பித்தான். பிறகு பள்ளிக்கு வீட்டிலிருந்து ஓடினான். பள்ளி மைதானத்தில் ஓடினான். ஓடுவது அவனுக்குப் பிடித்திருந்தது. பள்ளியில் தடகளக் குழுவில் சேர்ந்தான்.

கிளென் கன்னிங்காம் என்ற அவர்தான், 1934–ம் ஆண்டு அமெரிக்காவில் ஒரு மைல் தூர ஓட்டப் பந்தயத்தில் உலக சாதனை செய்தார். பிழைக்கவே மாட்டார், நடக்கவே மாட்டார் என்று சொல்லப்பட்ட அவர், ஒலிம்பிக்கில் 1,500 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் வெள்ளிப்பதக்கம் வென்றார். மன உறுதியே வெற்றிக்கான மந்திரம்.



## துணிவே துணை!

பத்து முறை தோல்வியில் விழுந்தாலும், பதினோராவது முயற்சியையும் அதே மன உறுதியுடன் செய்து இலக்கை நோக்கி முன்னேறுவதுதான் துணிச்சலின் அடையாளம். நிறைய பேர் தோல்வியைத் தடைக்கல்லாக நினைக்கிறார்கள். ஆனால், அது படிக்கல். தோல்வியை வாய்ப்பாகக் கருதினால், வெற்றி பெறுவதே உங்கள் பழக்கமாக மாறும். வெற்றி எந்தப் பாடத்தையும் கற்றுக் கொடுக்காது. ஆனால், தோல்வி கற்றுக் கொடுக்கும்.

நாம் எப்படி இருக்க வேண்டும் என்று இந்த உலகில் மற்றவர்களுக்கு ஒரு கருத்து இருக்கும். ஆனால், நமக்கு இருக்கும் கருத்துப்படி நம் வாழ்க்கையை வடிவமைப்பதே துணிச்சலின் அடையாளம். ஒரு கனவைத் தேர்ந்தெடுப்பது போலவே, அதில் உறுதியாக நிற்பதும் துணிச்சலின் அடையாளம்தான். தோல்விகள் வரும், அதன் காரணமாக விமர்சனங்கள் எழும், ஆனால் கனவைத் தொலைக்காத துணிச்சல் வேண்டும். நாம் தெளிவாக இருந்தால், நம் இலக்கு வசமாகும்.

## விருட்சத்தின் முதல் துளிர்!



ஒற்றைத் துளிராக ஒரு விதையிலிருந்து வெளிப்படுவது மாபெரும் விருட்சம். அந்த விருட்சம் சரியான திசையில் வளர வேண்டும். அடிடாஸ் நிறுவனம் அப்படித்தான் வளர்ந்தது. இன்று விளையாட்டு மைதானத்தில் அடியெடுத்து வைக்கும் அத்தனை பேரும் அணிவது அடிடாஸ் ஷூக்கள். ஜெர்மனியின் சிறிய நகரம் ஒன்றில், அடால்ஃப் டேஸ்லர் உருவாக்கிய நிறுவனம் அடிடாஸ்.

நிறுவனம் ஆரம்பிப்பதற்கு முன்பே, தனி ஆளாக ஷூக்கள் உருவாக்கி விற்கும்போதே, ‘விளையாட்டு வீரர்களுக்கு உலகத்தரமான ஷூக்களைச் செய்து தர வேண்டும்’ என்று அவர் கனவு கண்டார். தான் செய்து தந்த ஷூக்களை அணிந்து விளையாடுமாறு கேட்டுக்கொண்ட அவர், வீரர்கள் அதன்பின் சொன்ன கருத்துகளைக் காதில் வாங்கி, அதன்படி மாற்றங்களைச் செய்தார். அதனால் எல்லோருக்கும் வசதியான ஷூக்களை அவரால் உருவாக்க முடிந்தது.

1954–ம் ஆண்டு ஜெர்மனி அணி கால்பந்து உலகக்கோப்பையை வென்றபோது, அடிடாஸ் ஷூக்கள் பற்றி உலகமே அறிந்தது. அதன்பின் உலகம் முழுக்க அந்த பிராண்ட் புகழ்பெற்றது. வாடிக்கையாளர்கள் கருத்தைக் கேட்டு ஒரு பொருளை உருவாக்கினால், அதை எல்லோரும் நேசித்து வாங்குவார்கள் என்பதற்கு அடையாளம், அடிடாஸ்.



# தீபாவளி தரும் வரம்!

* தன்னில் நீராடுபவர்களின் பாவங்களைப் போக்கி நற்கதி வழங்குபவளாகத் திகழ்ந்து வருகிறாள் கங்கை. தீபாவளி திருநாள் அன்று சிவபெருமான் உலகிலுள்ள நீர்நிலைகள் அனைத்திற்குமே கங்கையின் புனிதத்தை வழங்குகிறார் என்பது நம்பிக்கை. இந்த ஐதீகத்தின்படி அன்று நம் வீட்டில் உள்ள கிணறு, குழாய் ஆகியவற்றில் வரும் தண்ணீர் அனைத்தும் கங்கை நீராகவே பாவிக்கப்படும். இதனால்தான் அன்று காலையில் நீராடுவதை ‘கங்கா ஸ்நானம் ஆச்சா?’ என்று கேட்கிறார்கள்.
* சிலர் வெந்நீரில் ஆல், அத்தி, புரசு, மாவிலங்கை போன்ற மருத்துவ குணமுள்ள மரப்பட்டைகளைப் போட்டு கொதிக்க வைத்து, அந்த நீரில் நீராடுவார்கள். இதனால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.
* தீபாவளியன்று சூரிய உதயத்துக்கு முன்பாகவே எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட வேண்டும்.
* தீபாவளியன்று எண்ணெய் தேய்த்துக் குளித்ததும், புதிய ஆடைகளையும், புதிய பலகாரங்களையும் வைத்து வணங்குவது வழக்கம். இது முன்னோர்களுக்கு வைக்கும் படையல் ஆகும். அன்று நம் பித்ருக்கள் இல்லம் தேடி வருவதாக ஐதீகம்.
* தீபாவளி நாளில் உப்பு வாங்கி வீட்டில் வைப்பது அதிர்ஷ்ட வரவாகக் கருதப்படுகிறது. உப்பில் மகாலட்சுமி வாசம் செய்வதாக நம்பிக்கை.
* காசியில் இருக்கும் அன்னபூரணியைத் தீபாவளித் திருநாளில் தரிசித்தால், ஆண்டு முழுக்க உணவு பற்றிய கவலை இல்லத்தில் இருக்காது என்பது நம்பிக்கை. எல்லோருக்கும் காசி சென்று அன்னபூரணியைத் தரிசிப்பது சாத்தியமில்லை. ஆதிசங்கரர் இயற்றிய அன்னபூர்ணா அஷ்டகத்தைச் சொல்லி, வீட்டிலேயே அன்னபூரணியை வழிபட்டு இதே பலனைப் பெறலாம்.
* கேதார கௌரி விரதம் மேற்கொண்டு சக்திதேவி சிவபெருமானின் உடலில் பாதியைப் பெற்றது தீபாவளி தினத்தில்தான்.
* குபேரன் சிவபெருமானை வழிபட்டுப் பல பொக்கிஷங்களைப் பெற்றது தீபாவளி நன்னாளில்தான். தீபாவளி நாளில் குபேர பூஜை செய்தால், பணத்தட்டுப்பாடு வராது என்பது நம்பிக்கை.
* வட மாநிலங்களில் தீபாவளியின் முதல் நாள் இரவில், வீட்டின் வெளிப்புறம் ஒரு உயரமான இடத்தில் தீபம் ஏற்றி வைப்பார்கள். உயரமான இடம் இல்லாதவர்கள், வீட்டுக்கு வெளியே வடக்கு திசையில் ஒரு அகல் விளக்கு ஏற்றி வைப்பார்கள். இது ‘எம தீபம்’ எனப்படுகிறது. எதிர்பாராத விபத்து, அகால மரணம் போன்றவை நிகழாமல் இந்த வழிபாடு தவிர்க்கும் என்பது நம்பிக்கை.
* அந்தக் காலத்தில் தமிழகத்தில் தீபாவளி கொண்டாட்டங்கள் இல்லை. தமிழகத்துக்கு தீபாவளியை அறிமுகம் செய்தவர் மன்னர் திருமலை நாயக்கர். தான் ஆட்சி செய்த மதுரையில் தீபாவளி கொண்டாடி, தமிழ் மண்ணுக்கு இதைக் கொண்டுவந்தார் அவர்.
* ஸ்ரீரங்கம் ரங்கநாதப் பெருமாள் தீபாவளியை விமரிசையாகக் கொண்டாடுகிறார். தீபாவளி அன்று காலை அவருக்கு காவிரி தண்ணீரைத் தங்கக் குடங்களில் நிரப்பி அபிஷேகம் செய்து, சிறப்பு அலங்காரம் செய்வார்கள். புத்தாடையும் அணிவிப்பார்கள். அன்று மாலை, இறைவனுக்குச் சீர் வழங்குகிறார்கள். மூட்டையாக எடுத்து வரப்படும் நாணயங்களே சீர். இவை நம்பெருமாளின் திருவடிகளைச் சுற்றி வைக்கப்படும். இந்தக் காட்சியைத் தரிசித்தால் ஆரோக்கியமான வாழ்க்கையும் குறையாத செல்வமும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


Feel like a
Champion.
Inside!
There is a champion within you.
Unleash your true potential with
lasting comfort & confidence from
within, with Ramraj Banians.
Inners for Winners
RAMRAJ ©
BANIANS • BRIEFS • TRUNKS
Shreyas Iyer - Cricketer
SCAN QR CODE FOR
STORE LOCATION
SUKRA ® Super Fine Banians
ROMEX ® Supreme Banians
RISE-UP ® Premium Banians
ARCHERY ® Gym Vest
COMPACT ® Flexible Rib Vest
ACOSTE ® BANIANS | BRIEF | TRUNKS
Available @ Ramraj Showrooms & All leading textile shops | Shop online @ www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2022-24. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-11-2023. Posted at Tirupur BPC on 5th of every month.

India's Most Attractive Dhotis Brands
India's Most Trusted Dhotis Brands

RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

# பண்டிகை என்றாலே ராம்ராஜ் நிரந்தரம்!!

**இந்த தீபாவளிக்கு,**
**குடும்பத்தில் அனைவரும் வேட்டி கட்டி கலக்குவோம்!!**
**அலப்பறை கௌப்புவோம்!!**

பட்டாசு விரும்பும் லிட்டில் ஸ்டார்களுக்கு குட்டிஸ் வேட்டிகள், சர்ட்டுகள்.
இளைஞர்களுக்கு ஒட்டிக்கோ கட்டிக்கோ பாக்கெட் வேட்டிகள்.
புது மாப்பிள்ளைகளுக்கு லக்னா பட்டு வேட்டிகள், சர்ட்டுகள்.
பக்தி விரும்பும் ஆஸ்திகர்களுக்கு ஆச்சார்யா பஞ்சகச்சம்.
மேலும் விதவிதமான ராம்ராஜ் மேட்சிங் வேட்டிகளுக்கு ஏற்ற சர்ட்ஸ், குர்தா அனைத்து பாரம்பரிய ஆடைகளோடு தீபாவளியை கொண்டாடுங்கள்.

மாறாத நம் கலாச்சாரம்...!! என்றும் ராம்ராஜ் நிரந்தரம்... !!



SCAN QR CODE FOR STORE LOCATION

Little Stars® குழந்தைகள் வேட்டிகள் & சர்ட்டுகள்
GENXT® அட்ஜெஸ்டபுல் பாக்கெட் & வேட்டிகள்
lagnaa® தூய்மையான பட்டு வேட்டிகள் & சர்ட்டுகள்
ACHARYA® பஞ்சகச்சம் வேட்டிகள்
CULTURE CLUB® மேட்சிங் வேட்டிகள் & சர்ட்டுகள்
LINEN PARK® வேட்டிகள் • சர்ட்டுகள் • டவுசர்கள் • பேப்ரிக்ஸ்
Culture India™ பாரம்பரிய குர்தா • பைஜாமா

கம்பெனி ஷோரூம் மற்றும் முன்னணி ஜவுளி நிறுவனங்களில் கிடைக்கும் | shop online @ www.ramrajcotton.in